

# தென்னாடு

www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2051 வீறியெழல் ஆண்டு நளித் திங்கள் (கார்த்திகை) 15ம் நாள் (30.11.2020) நிறைமதி வெளியீடு +94 21 221 2739

## வாரியார் சுவாமிகளின் 17வது குருபூசை



இறைபுகழை உலகெங்கும் இறைத்தவரின் குருபூசை துலைத் திங்கள் கட்செவி நாண்மீனில் (ஐப்பசி ஆயில்யம்) சிறப்பாக கொண்டாடப்பட்டது.

04 ▶

# சிலைத் திங்கள் ஆறாம் நாள் திருவெம்பாவை விரதாரம்பம்

## பதின்னான்கில் ஆதிரை அருட்காட்சி



**சிலைத் திங்கள் (மார்கழி) ஆறாம் நாள் (டிசம்பர் 21ம் திகதி) திருவெம்பாவை விரதம் ஆரம்பமாகிறது.** குளிரும் பனியும் நிறைந்த சிலை திங்களில் கன்னிப் பெண்கள் காலை மலர்வதற்கு முன்னர் கண்விழித்து மற்றப் பெண்களையும் துயில் எழுப்பி பொய்கைகளில் நீராடி எம்பெருமான் ஈசனின் புகழ்பாடி , அவனருளாலே அவன் தாள் வணங்குவதே இந்த நோன்பின் உட்கருத்து.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை என்று தொடங்கி போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் , போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய் என்று முடிகிறது வாதவூரரின் வார்த்தைகள். இறைவனை உள்ளுணர்வோடு உருகிப் பாடியதே திருவாசகம். இதனை பொருளறிந்து பாடினால் அறிவுவரும் பொருளுணர்ந்து பாடினால் அழுகைவரும்.அதாவது பாடுகிற நாம் , பாடப்படுகின்ற திருவாசம் , பாடுவதாகிய செயல் மூன்றும் ஒருமித்தால் தான் அதன் உள்ளனுபவத்தினை பெறமுடியும்.

இதனை வள்ளற் பெருமான் அழகாக எடுத்துரைத்துள்ளார். "வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை, நான் கலந்து பாடுங்கால் நற்கருப் பஞ்சற்றினிலே, தேன் கலந்து பால்கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, என் ஊன்கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே"



மரகதக் கூத்தன்
உத்தரகோசமங்கை

**சிலைத் திங்கள் பதின்னான்காம் நாள் (டிச 30) ஆதிரை அருட்காட்சி (ஆருத்திரா தரிசனம்) இடம்பெறும்.** சிவபெருமானின் நாண்மீன் ஆதிரையாகும்.இந்த ஆதிரை நன்னாளில் தில்லை கனகசபையில் உலகை இயக்கும் நடனமாடினார் ஆடல்வல்லான். இதுவே ஆதிரை அருட்காட்சி (ஆருத்திரா தரிசனம்) எனப்படுகிறது. சங்கத் தமிழர்களால் ஆதிரை சிவனுடைய நாண்மீனாகக் கொண்டாடப் பட்டதை விவரிக்கும் பரிபாடல் (71-78) ஆதிரை முதல்வன் என்றே சிவபெருமானைக் குறிப்பிடுகிறது. கலித்தொகையும், முத்தொள்ளாயிரமும் சிவபிரானை ஆதிரையான் என்றே அடையாளப்படுத்துகின்றன.

உலகின் முதலாவது சிவன் கோவிலெனப் போற்றப்படும் தமிழ்நாடு இராமநாதபுரத்தில் உள்ள உத்தரகோசமங்கையில் உள்ள மரகதத்தினாலான ஆடல்வல்லான் அருளரசனின் சந்தனகாப்பு ஆதிரை முதல்நாள் இரவு கழையப்பட்டு , மங்கல சிவநீராட்டு இடம்பெற்று மீண்டும் சந்தனக்காப்பு இடம்பெறும். வருடத்தில் ஒருமுறை மட்டும் தான் மரகதப் பெருமானைப் பார்க்கமுடியும்.இங்கே ஆதிரை அருட்காட்சி காண்பது வாழ்க்கையின் மிகப்பெரிய தவமாகும். இந்தமனிதப் பிறவியில் இந்தச் சந்தர்ப்பத்தினை தவறவிடாமல் நிறைவேற்றுவது சைவர்களின் கடமைகளில் ஒன்றாகும்.

கீர்த்தித் திருஅவகவலில் "உத்தரகோச மங்கையுள் இருந்து, வித்தக வேடம் காட்டிய இயல்பும்" என்று வருந் தொடர், இத்திருக் கோவில் வரலாற்றில் ஆயிரம் முனிவர்களுக்கு இறைவன் தன் வடிவம் காட்டிக் காட்சி கொடுத்த வரலாற்றைக் குறிப்பதாகச் சொல்லப் படுகிறது. ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை ஆரா அமுதின் அருள்தாளிணைப் பாடிப் போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ என்று மாணிக்கவாசகர் , உத்தரகோசமங்கையே சிவபெருமானின் ஊர் என்று பாடுகிறார்.

ஆடல்வல்லான் உத்தரகோசமங்கையில் அம்பாளுக்கு முன் திருநடம் ஆடிய பின்னர்தான் தில்லையில் ஆடுவார். இப்படியான உத்தரகோசமங்கை மண்ணை மிதித்தால் நிச்சயம் சிவப்பேறு கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

## திருவாசகத்தில் ஒரு வாசகம்



**தில்லை மூதூர் ஆடிய திருவடி**
**பல்லுயிர் எல்லாம் பயின்றனன் ஆகி**

– கீர்த்தித் திருஅகவல் (1-2)

தில்லை என்ற ஒருவகை மரங்களால் மேவிய வனத்தையுடைய மூத்த ஊரான சிதம்பரத்தில் ஆடுகின்ற இறைவனின் திருவடி அண்டத்தினை இயக்குவது போல் பிண்டத்திலும் உள்நின்று சகல உயிர்களையும் இயக்குகின்றது. ஏகன் என்கின்ற ஆடல்வல்லானாகிய தில்லைக்கூத்தன் அநேகனாகி அனைத்து உயிர்களிடையேயும், உயிருக்குள் உள்ளே இருந்து இயங்கி , உயிரையும் இயங்க வைத்துக் கொண்டிருக்கிறான். அந்த திருவடிகளை பற்றி நாமும் பற்றுகளைக் கடந்து சிவப் பேரின்பத்தினை அடைவோமாக.

உமாபதி சிவம் அவர்களின் கோவிற் புராணத்தில் , தேசமார் மன்று அகன்று சிவகதி அதனை உற்றார் காசியில் இல்லை,தில்லைக் கதி தரும் என்று அணைந்தால் பாசமது அகல முத்தி பணித்திடும் அன்றால், இந்த ஈசனார் அருள் இரக்கத்தை எல்லையார் சொல்லுவாரே என்று சிதம்பரத்தின் பெருமையை போற்றுகிறார்.

**கோவிலென்றாலே சிதம்பரம் எனப் போற்றப்படுகின்ற தில்லை மூதூரில் உறையும் ஆடல்வல்லான் அடி போற்றி**

## கருமுதல் திருவரை

### கருக்கலையாமல் இருக்கப் பாடவேண்டிய திருப்பதிகம்

எங்கள் நாயன்மார்களின் திருமுறைகள் பிறவிப்பிணியினை அறுபவையாக மட்டுமல்லாமல், வாழ்வின் இருளை நீக்கி அருளைத் தரவல்ல அற்புதத்தமிழ் மந்திரங்கள். அவை வாழ்வியல் பலன்களை அடையவும் வழிகாட்டியாக இருக்கின்றன. அந்தவரிசையில் கருத்தரித்தவர்கள், அந்தக்கரு கலையாமல் சிறந்தமுறையில் வளரப் பாடவேண்டிய பதிகம் ( கோவில் - திருக்கருகாவூர், பாடியவர் - திருஞானசம்பந்தர் , திருமுறை - மூன்றாம் திருமுறை , பண் - கௌசிகம்)



**திருச்சிற்றம்பலம்**

முத்திலங்கு முறுவல் உமை அஞ்சவே
மத்த யானை மறுகவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்த கடவுள் கருகாவூர் எம்
அத்தர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே

கலவ மஞ்ஞை உலவுங் கருகாவூர்
நிலவு பாடலுடையான் தன் நீள்கழல்
குலவு ஞானசம்பந்தன் செந்தமிழ்
சொலவலார் அவர் தொல்வினை தீருமே

**திருச்சிற்றம்பலம்**

**நன்றிகள்: திருநணா சிவனடியார்கள் அறக்கட்டளை**

# திருவெண்ணெய் நல்லூரில் சுந்தரரை ஆட்கொள்ள வந்த

## சிவனின் பாதணி

தமிழ்நாடு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திருவெண்ணெய் நல்லூர் என்னுமிடத்தில் உள்ள அருள்மிகு தடுத்தாட்கொண்டநாதர் கோவிலில் (கிருபாபுரீசுவரர்) இன்றும் சிவபெருமான் அணிந்து வந்த காலணிகளைக் காணலாம். சுந்தரமூர்த்தி நாயனாரை தடுத்தாட்கொள்ள வரும்போது இறைவன் சிவபெருமான் அணிந்து வந்த பாதணிகளை வெளியே கழற்றியபடி கோவிலுள் சென்று வாதிட்டுப் பின்னர் காட்சி கொடுத்து மறைந்தார். இதனை இன்றும் கோவில் கருவூலத்திற்கு முன் மண்டபத்தில் காணலாம். திருவண்ணாமலை செல்லும் அடியார்கள் இவ்வழியால் செல்ல வாய்ப்புக் கிடைத்தால் தவறவிடாமல் இந்தக் கோவிலுக்கும் சென்று வழிபட்டுச் செல்லலாம்.



# அகநானூறு புறநானூறு ஆகிய சங்கப் பனுவல்களில் மூத்தோர் வழிபாடாக நடுகல்

**(கடந்த மாதத் தொடர்ச்சி)**

மேற்குறித்த பாடல்களில் கல்நடுதல், நன்னீராட்டுதல், பீலி சூட்டுதல், பலியிடுதல், நெய்விளக்கேற்றுதல், மது படைத்தல், மாலை சூட்டுதல், வணங்குதல் ஆகிய வழிபாட்டு முறை எடுத்துக்காட்டப்படுதல் கவனிக்கத்தக்கது. நடுகல் அமைக்கும்போது இறந்தவர்கள் புழங்கிய பொருட்களை யும் இட்டுப் புதைத்தலை (புறம்329, புறம்252, அகம்35) அக்கால மக்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

தமிழகத்தில் நடுகற்களைப் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் வெ.கேசவராஜ் (5) அமைக்கப்பட்ட நடுகற்களை நிரை மீட்டோர் கல், வடக்கிருந்தோர் கல், பத்தினிப் படிமக்கல், கடலுள் மாய்ந்தோர் கல், ஊர்காத்தான் கல், பெண் மீண்டான் கல், அறம் காத்த நடுகல், கழி பேராண் மைக்கல், சாவாரப் பலிக்கல், அடியார் சமாதி, அரசர் பள்ளிப்படை, புலி குத்திக்கல், பன்றிகுத்திக் கல், குதிரை குத்திக்கல், எழுது பொருதார் கல், மாடு பொறித்த கல், யானைப்போர் நடுகல், நாய்க்கு நடுகல் ஆகியனவாக வகைப்படுத்தியுள்ளார். இவற்றுள் சங்ககாலப் பிற்பகுதியில் மீட்கப்பட்ட நடுகற்களும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

**4. முன்னோரைப் போற்றுதல்**

தொல்தமிழர் மரபில் நடுகற்கள் வீரக்கற்களாகப் போற்றப்பட்டிருக்கின்றன. போரில் மரணமடைந்தவர்கள் தம் குடிகளைக் காக்க வந்தவர்களாகவும் அவர்கள் தம்மைக் காவல் செய்கிறார்கள் என்பதனையும் மக்கள் நம்பினர். அதனாலேயே வழிவழியாக வந்த நம்பிக்கையின் அடிப்படையில் நடுகற்கள் பின்னர் வணக்கத்துக்குரியனவாகப் போற்றப்பட்டிருக்கின்றன. இவை தமக்கு முன்னோரை தெய்வமாகப் போற்றி வழிபடும் மரபை எமக்குக் காட்டுகின்றன.

“ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்ததெனக்
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே“ (6)

என்ற மாங்குடி மருதனாரின் புற நானூற்றுப் பாடல் களிற்றை வென்று தாமும் வீழ்ந்து நடுகல்லாயினவரின் நடுகல்லைத் தொழுவதன்றி நெல்லும் பூவும் சொரிந்து வழிபடச் சிறந்த கடவுளும் வேறு இல்லை என்று குறிப்பிடுகிறது. இதனூ டாக களிறு எறிந்து பட்டோருக்கு நடுகல் அமைத்து அவனையே தெய்வமாக வணங்கும் வீரவழிபாடு எடுத்துக்காட்டப்படுகிறது.

“நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்து எதிர் பெறுகதில் யானே“ (7)

என்ற இப்புறப்பாடல் களிறுகள் பொருது சிதைந்த முள்செடியாலாகிய வேலியும் மக்கள் அரிதாகவே வந்து உண்ணும் நீர்நிலையும் உடைய சிறிய ஊரிலே வாழ்ந்த மறக்குலப் பெண் தன் கணவன் பகைமுடித்து வருக என நடுகல்லை வேண்டுகிறாள். இப்பாடல் நடுகல்லை வழிபாடு செய்யும் ஒரு பெண்ணைக் கண்டோர் கூற்றாக அமைந்துள்ளது. “தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை 300ற்கும் மேற்பட்ட நடுகற்களை வடார்க்காடு, தர்மபுரி மாவட்டங்களில் கண்டு பிடித்துள்ளது. இவற்றில் பெரும் பாலான நடுகற்கள் இன்றும் வழிபாட்டில் உள்ளன. மக்கள் இந்நடுகற்களை கடவுளாக வழிபட்டு வருகின்றனர். இவற்றிற்கு ஆண்டுதோறும் சிறந்த வழிபாடுகள், விழாக்கள் நடத்தப்படுகின்றன. இவற்றின் முன்னர் இரும்பாலான சூலமும் கத்தியும் இன்றும் நட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கும் எண்ணெய் பூசி, மாலை அணிவித்து வழிபடுகின்றனர்.“(8)

**5. தொடரும் வழிபாட்டு மரபு**

பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை, கமில் சுவலபில், வ. அய். சுப்பிரமணியன் ஆகியோர் சங்கப்பிரதிகளை காலநிரற்படுத்தியதுபோது பேராசிரியர் வீ. அரசு அவர்களும் சடங்கு சார்ந்த தொகையாக்கத்தில் சங்கப் பிரதிகளை காலநிரற்படுத்துகையில் நான்கு வகையான எல்லைப்பாடுகளை வகுக்கிறார். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குநூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றை முதற்தொகுதியாகக் கொண்டு அவற்றின் காலத்தை கி.மு 550 என்ற மேல் எல்லையைக் கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். ஆற்றுப்படை நூல்களை (திருமுருகாற்றுப்படை தவிர்ந்த) இரண்டாவதாகவும் கலித்தொகையை மூன்றாவதாகவும் பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படையை நான்காவதாகவும் வகைப்படுத்துகிறார். இவற்றில் “முதற்தொகுதியில் இச்சடங்கு மிகுதியாக இடம்பெற்றிருப்பதும் படிப்படியாக அடுத்தடுத்த தொகுதிகளில் இச்சடங்கு குறைவாக இடம்பெறும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு முதல் தொகுதியில் அமைந்த சங்கப் பிரதிகளைக் காலநிரலில் பழமைமிக்கனவாகக் கருத இயலும். நடுகல் மரபும் தொல்பழங்குடிச் சமூக அமைப்பின் அடையாளத்தைக் கொண்டது. இச்சடங்கு தொல்பழம் பிரதிகளில் இடம்பெற்று படிப்படியாக வைதீகப் பிரதிகளில் மிகக் குறைந்து போயிருப்பதைக் காண்கிறோம். எனவே, தொல்பழஞ்சடங்கைக் கொண்டிருக்கும் பிரதி பழம்பிரதியாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். நடுகற்களில் காணப்படும் பிராமி எழுத்துக்கள் தமிழின் தொன்மையான எழுத்து வடிவம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கி.மு 550 அளவில் நடப்பட்ட நடுகல் கிடைத்துள்ளது. இதில் பிராமி எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதன்மூலம் தொல் பழம் தமிழ் எழுத்தின் தரவாக அமையும் நடுகற்கள் சங்க இலக்கியத்தில் பேசப்படுவதன் மூலம் அதன் பழமையை அறிய முடியும்.“(9)

இவற்றினூடாக சங்கப்பனுவல்களை காலநிரற்படுத்தும்போது முதலில் வைக்கப்பட்டுள்ள அகநானூறு புறநானூறு ஆகியவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள் அதிகம் வந்துள்ளமையும் ஏனைய



பிரதிகளில் (நற்றிணை-1, குறுந்தொகை-2, ஐங்குநுறூறு-2, மலைபடுகடாம்-1, பட்டினப்பாலை -1, பரிபாடல் -1, திருமுருகாற்றுப்படை-1) மிகக் குறைந்த பதிவுகளே வந்துள்ளன என்ற



உண்மையினையும் கண்டு கொள்ளமுடியும்.

அகநானூற்றுப் பாடல்களில் கற்குவியற் பதுக்கைகளும் நடுகற்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை “எழுத்துடை நடுகற்கள்“ என்ற செய்திகளும் கிடைக்கப்பெறுவதோடு அவற்றுக்கு அருகில் வேல், கேடகம் வைக்கப்பட்ட செய்திகளும் உள்ளன. சில பாடல்களில் நடுகற்களின் முன் பலியிடப்பட்ட செய்தி வருகிறது. ஆனால் புறநானூற்றில் வழிபாடு இயற்றும் குறிப்புக்கள அதிகமாக உள்ளன. இங்கு நடுகற்கள் ஒரு சடங்கு முறையாகவும் வழிபாட்டுக்கு உரியதாகவும் மாற்றமடைவதை அவதானிக்கலாம்.

நடுகற்களை வணங்குவதால் மழை வளம் பெருகும், நாடு சிறப்புறும், பயிர்வளம் சிறக்கும், போருக்குச் சென்ற நிலத்தலைவர்களும் வீரர்களும் வெற்றி பெற்று மீள்வார்கள், மக்கள் பாதுகாக்கப்பட்டு சிறப்பெய்துவார்கள், நோய் முதலியவற்றிலிருந்து விடுபடுவார்கள் முதலான நம்பிக்கைகள் இவற்றினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதனாலேயே “வேள்வி நடாத்தி மடை கொடுத்துச் சிறு தெய்வங்களை வழிபடுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது எண்ணத்தக்கது. ஐயனார், மதுரைவீரன், இருளன், கறுப்பன், நொண்டி முதலியன நடுகல் தெய்வங்களை ஒத்தனவாயுள்ளன.“(10) என சு. வித்தியானந்தன் அவர்கள் நடுகல் வழிபாடு, கிராமிய தெய்வ வழிபாடாக மாறியமை குறித்து எழுதுகிறார். இதனாலேயே முன்னோரை வழிபடும் மரபாக நடுகற்கள் அமைந்துள்ளன என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

“வீரக்கற்களை நிறுவுவது என்பது அக்காலச்சமூகத்தின் இறப்புச் சடங்கோடு தொடர்புடைய நம்பிக்கைகள் பழக்கங்களின் ஒரு கூறாகும். இந்த பழக்கமும் இதனை ஒட்டிய நம்பிக்கையும் தென்னிந்தியாவில் கி.மு முதலாயிரம் ஆண்டுகளின் பிற்பாதியில் நிலவிய இரும்புக்காலப் பெருங்கற் புதைவுப் பழக்கத்தின் ஒரு பகுதியாகும். இதன் இறுதிச் சடங்கு எச்சங்கள் நாடு முழுவதும் காணப்படுகின்றன. மேலும் இந்தப் பழக்கத்தோடு இறந்த முன்னோரை வழிபடும் மரபும் முற்பட நிலவிப் பின் இதனோடு கலந்திருந்ததாகக் கருதப்படுகிறது.“(11) இறந்தவர்களின் நினைவும் அவர்களை நடுகற்களாக அமைத்து வழிபடுவதால் தமக்கு அவை ஆற்றலை வழங்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் இவற்றை வணங்கியிருக்கின்றனர்.

**6. முடிவுரை**

சங்கப்பனுவல்களில் அகநானூறு புறநானூறு ஆகியவற்றின் வழி நடுகற்பண்பாடு இருந்துள்ளது என்பதும் அவை நாடுகாக்கும் போரிலும் நிரைமீட்கும் போரிலும் தம் குடிகளைக் காக்கும் ஏனைய வழிகளிலும் தம்முயிரைக் கொடுத்து மாண்ட வீரர்களை நினைக்கும் வகையில் அமைக்கப்பட்டவை என்பது எழுத்துக் களின் வழியிலான ஆதாரங்களின் ஊடாக அறியப்படுகின்றன. உயிர்நீத்த வீரர்களுக்கு கல்நட்டு வழிபாடு இயற்றும் வழக்கம் அதிகமும் தொல்குடிகளின் பண்பாட்டில் நிகழ்ந்துள்ளன. இது தொடர்ச்சியாக ஒரு சடங்குமுறையாகப் பேணப்பட்டு வந்துள்ளது. மூத்தோரை வழிபடும் இந்நடுகற் பண்பாடே பிற்காலத்தில் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடாக நிலைபெற்று வளர்ந்திருக்கின்றது. இதனூ டாக தமிழரின் வழிபாட்டு மரபு என்பது நடுகற்களின் வழியாகவே பேணப்பட்டு வந்துள்ளது என்பது சங்கப்பிரதிகளின்வழி தெளிவாகப் பதிவாகியுள்ளன. இவற்றை அறிவியல் பூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் தொல்பொருள் ஆய்வுகளின் ஊடாகக் கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களும் அண்மைய கீழடி ஆய்வுகளிற் கிடைத்த பழந்தமிழரின் புழங்கு பொருட்களும் மேலும் உறுதிப்படுத்து கின்றன. இவற்றின்வழி தமிழரின் வழிபாடு மரபின் வேர்களைக் கண்டடைய முடியும் என்று கருத இடமுண்டு.

**அடிக்குறிப்புகள்**


1. அரசு, வீ., (2009), சங்க நூல்களில் இடம்பெற்றிருக்கும் சடங்குகள் சார்ந்த தொகையாக்கம், புதிய பனுவல், சர்வதேசத் தமிழியல் ஆய்விதழ், இதழ் 3, ப.6
2. பிரபு, ஆ., நடுகல் வழிபாடும் தமிழர் நம்பிக்கையும், https://ourjaffna.com/tradition/
3. கைலாசபதி, க., (2006), தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், சென்னை,ப.325
4. தொல்காப்பியம், புறத்திணையியல், (2007), கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, நூற்பா 60:19-22
5. கேசவராஜ், வே., (2008), தென்னிந்திய நடுகற்கள், காவ்யா, சென்னை.
6. புறநானூறு, 335:10-12
7. மேலது, 306:4-5
8. அர்த்தநாரீசுவரன், பெ., (1996), கல்வெட்டுவழிப் பண்பாட்டியல், கொங்கு வேள் பதிப்பகம், சென்னை. ப.8
9. அரசு, வீ., மேலது 1, ப.6-7
10. வித்தியானந்தன், சு., (1971), தமிழர் சால்பு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை. ப.125
11. கைலாசபதி, க., (2006), மு.கு.நூல், 325-326


**உசாத்துணை**


1. அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
2. புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
3. சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், சிவத்தம்பி, கா., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009.
4. பண்டைத் தமிழ்ப் பனுவல்கள், சதீஸ். கோ., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2016
5. தமிழ் வீரநிலைக் கவிதை, கைலாசபதி, க., குமரன் புத்தக இல்லம், சென்னை, 2006.
6. தொல்லியல் சுவடுகள், 2011, வேதாசலம், வெ., டெக்லா, ச.,(பதி.ஆ) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
7. வீர வழிபாடு, https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0577.html


**கலாநிதி சு. குணேஸ்வரன்**



# தென்னாடு

www.thennadu.org



சிவத்திரு.செந்தமிழாதன்,
ஆசிரியர் - தென்னாட்டுத் திண்ணை,
சைவ மாணவர் சபை (பதிவு - HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org

## சிறந்து ஓங்குக செந்தமிழ் வழிபாடு

வரலாற்றின் பக்கங்களை வருத்தத்தோடு புரட்டும், ஒரு பேரினத்தின் இளைய தலைமுறை, தமது முன்னைய தலைமுறைகளை எண்ணி கோவப்பட்டுக் கொள்ளும். அவர்களது அறியாமையாலும், கோழைத்தனத்தாலும் தாம் இழந்தவற்றை நினைத்து நினைத்து வெட்கமடைவது தான் பேரவலமாகும்.

பெரும் துன்பமும், மனக்குறையும் வருகின்ற போதும், சக மனிதன் உதவ மறுக்கும் போதும், தம் கவலைகளைச் சொல்லி அழுவதற்காக கடவுளிடம் ஓடும் போது அங்கு ஒரு இடைத்தரகர் வழிமறித்து எங்கள் துன்பங்களை கடவுளிடம் மொழிபெயர்ப்புச் செய்து தான் வெளிப்படுத்துவார் எனின் அதைக்காட்டிலும் ஒரு துயரம் வேறெதுவும் இருக்க முடியாது.

தமிழன் கட்டிய பெரும் கோயில்களிலெல்லாம் தமிழ் மறுக்கப்படுவதும் சிலரால் வெறுக்கப்படுவதும் காலக்கொடுமை! 'மருந்து வேண்டில் இவை, மந்திரங்கள்இவை, புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மொழி செய்த தமிழே, மந்திர மொழி என்பதை மறந்த எம் முன்னோர்கள் கோயில்களோடு மொழியையும் தாரை வார்த்து கொடுத்தனர்! புரியாத ஏவல் மந்திரங்களை இறைவனை அர்ச்சனை செய்யும் மந்திரங்களாக எண்ணி மகிழ்ந்தனர்! தன்னைத் தகவமைத்து நிலை நிறுத்திக் கொள்ள இயலாத, பேச்சு வழக்கிழந்த வடமொழியை இறைமொழி என்றனர், நிறை மொழியாகிய தமிழை கருவறையில் நுழையத்தடுத்தனர்! காலம் முழுதும் கருவறையில் ஒலித்த தமிழ், ஆரியப்படையெடுப்புக்களால் அகன்று, அந்நிய மேலைத்தேய படையெடுப்புகளால் தன்னிலை மறந்து முன்னிலை அடைவதில் தடைப்பட்டு நின்றது என்பதை இளைய சைவத் தமிழ் உலகம் அறிவில் ஏற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டிய மறுமலர்ச்சிக் காலம் இப்போது கனிந்திருக்கின்றது. தமிழன் தன்னிலை மறந்திருந்த காலத்திலும், அவனது அடையாளங்களும் மரபும் அழிந்து போய் விடாது இருக்க சில விடிவெள்ளிகள் தோன்றி அரும்பணியாற்றிய புண்ணிய பலனாலேயே இன்றும் மறைந்த வேர்களைப்பற்றி நீர்பாய்ச்சும் புதிய முயற்சிகள் முன்னின்று நடக்கின்றன எனலாம்!

எம் பெரும் கடவுளர்களாகிய முன்னவர் வழிபாடும் சிவ வழிபாடும் செந்தமிழிலேயே இனிச் சிறக்கவேண்டி என்றும் எமக்கு முன்னையவர் செய்த பிழையை இளைய பிள்ளைகள் இனிச் செய்வதில்லை என்றும் உறுதி கொள்ள வேண்டும் 'மற்று நீ வன்மை பேசி வன்றொண்டன் எனும் நாமம் பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மை 'சொற்றமிழ்' பாடுக!' என்று இறைவன் விரும்பிக்கேட்ட இன்தமிழே இனி இறைத்தமிழாக ஓங்கி ஒலிக்க வேண்டும்! 'ஓம்' என்கிற பிரபஞ்ச ஒலிக்கு மந்திர தகுதியளித்த முருகன் அதன் பொருளறியாத பிரம்மனைத் தண்டித்தார் என்பது வெறும் புராணக் கதையல்ல அது பெருந்தமிழின் உயர் சிறப்பு என்பதை எப்போதும் நாம் ஆழ்ந்து விளங்கிக் கொள்கின்றோமோ...., 'ஆவாஹயாமி...' என்று வேத வேள்வியிலும் கோவிலிலும் ஓதிய போதெல்லாம் வராத இறைவன் 'அம்மையே.... அப்பா...' என்ற குரலுக்கு ஓடி வந்ததன் உள்ளார்ந்த செய்தியை தெளிந்து அறிந்து கொள்கின்றோமோ.... அந்தப் புள்ளிகளிலிருந்து எமது வரலாற்றின் மீது படிந்த இருள் அகன்று புதிய ஒளி விரிந்து பரவும்!.

இந்த விளக்கமும் தெளிவும் விரைந்து கிடைக்க அருவ நிலையில் நின்று நம்மை ஆளும் கடவுளர்களின் நிறைந்த அருளை வேண்டுவதும் எல்லோரும் ஒருமித்து அந்த அருளுக்காய் இறைஞ்சுவதுமே ஒரே வழி! இறந்து போன காலத்தின் இருள் அகன்று இனிச் சிறந்து ஓங்கட்டும் செந்தமிழ் வழிபாடு!




### திங்கள் ஒரு பள்ளி

# யாழ்ப்பாணத்தின் சைவப் பாசறை- மகாஜனக் கல்லூரி

**திருமதி.கேசினி.கோணேஸ்வரன்**
**(மகாஜனக் கல்லூரி பழைய மாணவி - சிட்னி, அவுஸ்திரேலியா)**

இலங்கையில் உள்ள சைவப் பாடசாலைகளில், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு ஒரு தனித்துவமான இடம் வழங்கப்படுகின்றது. ஆலயத்தில் தினசரி பூசை, தேவார, திருவாசகம், பெரிய புராணம் பாடுதல், முக்கியமான விழாக்களை முறையாகக் கொண்டாடுதல், கோவில்களின் திருவிழாக் காலத்தில் பூசைகள் செய்தல், சைவ நெறியுடன் கூடிய வாழ்க்கை முறை, சைவ உணவு, சரியைத் தொண்டுகளைச் செய்தல், சைவ சமய புத்தகங்களை பொருள் உணர்ந்து படித்தல், என இன்னும் பல சைவ நெறிமுறைகளை செயன்முறையாகச் செய்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ வகுப்பதால், மகாஜனக் கல்லூரி அன்று முதல் இன்று வரை ஒரு சிறந்த சைவப் பாடசாலையாக மிளிர்கிறது.



திரு.தெ. துரையப்பாபிள்ளை

சைவ சமயம் மக்களின் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளதை உணர்ந்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள், தெல்லிப்பழை என்ற கிராமத்திலே சைவப் பாடசாலை ஒன்றை 1910ல் ஆரம்பித்தார். தினசரி பிரார்த்தனை, வழிபாடுகளின் பின்னரே வகுப்புகள் நடத்தப்பட்டதாகவும், மாலையிலும் பிரார்த்தனையின் பின்னரே வீடு செல்வதாகவும், பாடசாலையில் கற்ற பெரியோர்கள் கூறியுள்ளனர். வகுப்பறைகளின் நடுவில் ஓரிடத்தில், அடுக்குப்பெட்டி ஒன்றினுள் சுவாமிப் படங்களை வைத்து, திருமுறைகள் பாடி வழிபாடு நிகழ்ந்ததாகவும், ஒன்பனிரா (நவராத்திரி) விழாவினை கொண்டாடியதாகவும் 1930ல் பாடசாலையில் படித்த முதியவர் ஒருவர் கூறியுள்ளார்.

பாவலரின் மறைவின் பின் திரு.கா. சின்னப்பா அவர்களும், அவரைத் தொடர்ந்து பாவலரின் மூத்த மகன் திரு. து.ஜெயரத்தினம் அவர்களும் பாடசாலையை நிர்வகித்தனர். திரு. ஜெயரத்தினம் அவர்கள் அதிபராக இருந்த காலப் பகுதியில், பல புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. பாடசாலை வளாகத்தின் வடகிழக்கு பகுதியில், தெற்கு நோக்கிய ஆலயம் அமைக்கப்பட்டு, ஐம்பொன்னினாலான சிவகாமி அம்மனுடனுறை ஆனந்தக் கூத்தப் பெருமான் திருவுருவங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டு, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிவத்திரு.வைத்தியநாதக் குருக்களினால் 30.10.1960ல் கடவுள் மங்கல நீராட்டு நிகழ்த்தப்பட்டது.

“ஆலயந் தொழுவது சாலவும் நன்று “ என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க மாணவர்கள் காலையில் வரிசையாக சிவகாமி அம்மனுடனுறை ஆனந்தக் கூத்தப் பெருமான் ஆலயத்திற்குச் சென்று, அங்கு நடைபெறும் தீபவழிபாடு, பூவழிபாடு (அர்ச்சனை) என்பவற்றிற் கலந்து, தேவாரம், புராணம் பாடிய பின்பே வகுப்புகளுக்குச் சென்று பாடங்களைப் படிக்க ஆரம்பித்தனர். பூசை நிறைவடைந்ததும் திருமுறைகள் ஒலிவாங்கியில் பாடப்படுகின்றன. ஆலயத்தில் வழிபாடு செய்யும் மாணவர்களுடன், பாடசாலையின் வெவ்வேறு பகுதிகளில் கடமையில் இருக்கும் மாணவத் தலைவர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் போன்ற அனைவரும் நின்ற இடத்தில் இருந்தே வழிபாடு செய்ய வசதியாய் பாடசாலை சூழல் உள்ளது. இதே போன்று பாடசாலைக்கு வெளியேயும், அயலிலுள்ள மக்கள் அந்தந்த இடத்தில் நின்ற படியே கும்பிடுவது வழமை. ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் தேவார புராணத்துடன், சிவபுராணமும் பாடி வழிபட்டு வருகிறார்கள். இதனாலே எல்லா மாணவர்களுக்கும் சிவபுராணம் மனப்பாடமாக இருக்கிறது.ஆலயத்தில் ஆனந்தக் கூத்தனுக்கு ஆறு ஆடல்வல்லான் சிவ நீராட்டுக்களும் மிகச் சிறப்பாக

(05ஆம் பக்கம் பார்க்க)

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின் உங்கள் பாடசாலை அல்லது கல்லூரி குறித்து 350 சொற்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : aathan@thennadu.org

# வியக்க வைக்கும் வாரியார் சுவாமிகள்



ச.திருச்சுடர் நம்பி
(வாரியாரின் பேரன்)

உலகம் அனைத்தும் வியந்து பார்க்கும் தமிழ் நாட்டுக்கு பெருமைகள் பல உண்டு. நாட்டின் வளம் செல்வத்தால் மட்டும் அமைவதல்ல பண்புடை மக்கள் வாழ்ந்ததாலும் அமையும். அப்படி பண்பு நலன்களும் பண்பாட்டு சிகரங்களும் சிறந்து விளங்கிய நாடு நம் தமிழ் நாடு. அற்புத நலன்கள் நிறைந்த நாட்டின் சிறப்பினை விளக்கிக் கூற நினைத்த ஔவைப் பாட்டி தீந்தமிழ் பாடல் ஒன்றைப் பாடி அருளினார்.

**வேழம் உடைத்து மலைநாடு மேதக்க**
**சோழ வளநாடு சோறுடைத்து – பூழியர்கோன்**
**தென்னாடு முத்துடைத்து தெண்ணிர் வயற்றொண்டை**
**நன்னாடு சான்றோர் உடைத்து.**

சேர நாடு யானைகளை உடையது, சோழ நாடு நெல்வளம் கொண்டது, பாண்டிய நாடு சிறந்த முத்துக்களை உடையது, என ஒவ்வொரு நாட்டின் சிறப்பினை சொல்லி வந்த ஔவையார், தொண்டை நாட்டை பற்றிக் கூறும்போது, தெளிந்த நீர் நிரம்பி நிற்கும் வயல்களையுடைய தொண்டை நன்னாடு சான்றோர்களைச் சிறப்பாக உடையதாகும் என்று பாடினார். இதை விட தொண்டை நாட்டின் சிறப்பை எவ்வாறு சொல்ல முடியும்.

அந்த வகையில் தமிழ் நாட்டில், குறிப்பாக தொண்டை நாட்டில், பல சிறப்பு மிக்க அருளாளர்களும், ஞானிகளும், அறிஞர்களும், நற்குண சீலர்களும் பிறந்து வளர்ந்து பெருமை சேர்த்துள்ளார்கள். அப்படி வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் வந்த ஒருவர் தான் நமது திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் என்று சொன்னால் அது மிகையாகாது. தொண்டை நாட்டில் இறைத் தொண்டை நாடும் நம் வாரியார் சுவாமிகள் 1906ஆம் ஆண்டு காங்கேயநல்லூரில் வந்துதித்தார்.

பரம் பொருளைப் பாடும் பணியே பணியாய் கொண்டு தரணியெல்லாம் தமிழ் பரப்பி "கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்னும் ஔவையின் சொல்லுக்கு இலக்கணமாக திகழ்ந்தவர். அப்பெருமகனாரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகள் அனைத்துமே நமக்கு மிகப் பெரிய பாடம் மற்றும் சொத்து. அவற்றை ஈண்டு முழுமையாகக் காண ஏடு இடம் தராது, ஆகையால் அவரது பேரப் பிள்ளைகளுள் ஒருவனாக, தீக்கை பெற்ற சீடனாக சிறியேன் அவரைக் கண்டும் கேட்டும் வியந்தவற்றுள் சிலவற்றை இங்கு காணலாம்.

முதலில் நாம் வியக்கக் கூடிய ஒன்று அவருடைய நினைவாற்றல், ஒரு மனிதனால் எப்படி அவ்வளவு பாடல்கள் நினைவில் வைத்துக் கொள்ள முடியும் என்பது வியப்பே. அவருடைய 12 வயதில் அவருக்கு பதினாயிரம் பாடல்கள் மனனம். இது மிகப்பெரிய சாதனை என்றாலும், அதைவிடவும் நம்மை வியப்பில் ஆழ்த்தியது அதனை தன் இறுதி மூச்சு உள்ளவரை மறவாது இருந்தது, மற்றொன்று உரிய பாடலை சரியான நேரத்தில் மேற்கோள் காட்டி மேடையில் பேசுவது. அது நம் வியப்பின் உச்சம் என்று சொன்னால் அது மிகையல்ல. அவரின் பேச்சிலே பலர் அறிந்திடாத நூல்களில் உள்ள பாடல்கள் மேற்கோளாய் இடம்பெறும் பொருத்தமான திருக்குறள் வரும், கல்லாடமும் கலந்தினிது வரும், காப்பியங்களும் காதைகளும் காரணத்தோடு வந்து செல்லும், தோத்திரங்களும் சாத்திரங்களும் நேர்த்தியாய் நிறைந்து வரும், சிலம்பைக் கொண்டு சொற்சிலம்பாடுவார், இலங்கிய தமிழின் இலக்கண நூற்பாக்களை இறைத்துச் செல்வார், கருத்து நனி சொட்ட சொட்ட மழலைச் செல்வங்களுக்கு மதிப்புறு கதைகளைக் கொட்டிச் செல்வார். அவ்வகையில் பாமரன் முதல் பண்டிதன் வரை அனைவருக்கும் கொள்முதல் இருக்கும். முக்கியமாக எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முன்னாக தன்னை தயார் செய்து கொண்டதாக அவர் அருகில் இருந்தவர்கள் பார்த்ததே இல்லை. எந்த நிகழ்வுக்கும் குறிப்பெடுத்துக் கொண்டு பேசியதே இல்லை என்பது உண்மை. அவரிடம் ஒருவர் அணுகி இவ்வளவு நினைவாற்றலோடு குறிப்பில்லாமல் எப்படி தங்களால் பேச முடிகிறது என்ற போது, அவர் சிரித்துக் கொண்டே, "கிணற்று நீரை மோட்டார் போட்டு உறிஞ்சி மேலே உள்ள டாங்கிலே சேமித்து வைத்துக் கொண்டு தேவை பட்டபோது குழாயை திறந்து பயன்படுத்துகிறோம் அல்லவா, அது போல நல்ல நூல்களை படித்து அதன் சொற்களையும் கருத்துக்களையும் உறிஞ்சி மூளை என்னும் டாங்கில் ஏற்றி சேமித்து வைத்து விட்டால் தேவைப்படும் போது சொற்பொழிவில் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று வெகு சுலபமாக சொல்லிச் சென்றாராம்.

அடுத்த மிகப்பெரிய வியப்பு, அவர்கூறும் அற்புதமான உவமைகள் மற்றும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல். இவ்வகையில் கேட்பார் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிவது என்ற முறையில் கேள்விகளுக்கு பதில் அளிப்பதில் தன்னிகரில்லா தன்மையாளர்.

**"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை அறிந்து"**

என்று வள்ளுவப் பெருமான், சொன்னது போல சுவாமிகள் சொல்லும் சொல் வெல்லும் சொல்லாகவே அமைந்தது, கேள்வி கேட்பவர் எதிரான நிலைப்பாடு கொண்டிருந்தாலும் தன்னுடைய கூர்த்த மதி கொண்டு சொல்லும் பதிலால் கேட்டவரும் மனம் மகிழ்வர். உதாரணத்திற்கு ஒரு வைணவ அன்பர் சுவாமிகளின் சொற்பொழிவை கேட்டபின் சுவாமிகள் திருநீறு வழங்கிக் கொண்டிருந்த போது அவரிடம் சென்று ஒரு உள்நோக்கம் கொண்ட கேள்வியை கேட்டார். தான் தழுவிய வைணவ மதத்தை உயர்த்தியும் தான் வணங்கும் கடவுள் தான் பெரியவர் என்பது போலவும் அவரது கேள்வி அமைந்தது. அதாவது, "சுவாமி, எல்லா சிவன் கோயில்களிலும் திருமால் சன்னதி உண்டு,



ஆனால் எந்த திருமால் கோயிலிலும் சிவன் சன்னதி இல்லை பார்த்தீர்களா?" என்று கேள்வி கேட்டார். சுவாமிகள் சற்றும் யோசிக்காமல் திருநீறு கொடுத்துக் கொண்டே, "அது ஒன்றும் இல்லையப்பா, கலெக்டர் (Collector) வீட்டில் பியூன் (Peon) இருப்பார், பியூன் வீட்டில் கலெக்டர் இருக்க மாட்டார்" என்று சொன்னதும் கேள்வி கேட்ட அந்த அன்பர் என்ன சொல்வதென்றே தெரியாமல் மலங்க மலங்க விழித்தார்.

இக்கேள்விக்கு எத்தனையோ சாத்திர காரணங்களைச் சொல்லி விளக்கி இருக்கலாம் ஆனால் அவர் வெகு இயல்பாக இலகிய உதாரணத்தோடு அளித்த பதில் நெஞ்சில் ஆணி அறைந்தது போல் அமைந்ததோடு மட்டுமல்லாமல் பொருள் பொதிந்ததாகவும் அமைந்தது. திருமால் சிவனடியார் என்பது அனைவரும் அறிந்ததே இருப்பினும் மன பிணக்கு உடையவருக்கு எளிய உதாரணம் மூலம் உண்மையை அவர் மனம் கோணாத படி எடுத்துரைத்தல் என்பது வள்ளுவர் சொல்லுக்கு இலக்கணமாகவே திகழ்கிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு இணங்க ஒன்றை மட்டும் எடுத்து காட்டினேன், இன்னும் பற்பல உண்டு, ஏடு இடந்தராது என்றெண்ணி விடுக்கிறேன்.

அடுத்த மிகப்பெரிய வியப்பு அவரது பணிகள். கோயில் திருப்பணிகள், அறப் பணிகள் மற்றும் சமூகப்பணிகள் என சொல்லிக் கொண்டே போகலாம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்
## திருமால் பூசைசெய்த திருக்கோவில் திருக்கச்சூர்



சிவத்திரு
குமரேசன் இராஜசிம்மன்

(தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 259வது திருக்கோவில் திருக்கச்சூர்)

**அமைவிடம்:** (செங்கல்பட்டு - தமிழ்நாடு)

சென்னை - செங்கல்பட்டு புகையிரத வழியில் உள்ள சிங்கப்பெருமாள் கோவில் புகையிரத நிலையத்தில் இருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் இந்த சிவபுரங்களில உள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் சிங்கப்பெருமாள் கோவில் சென்று அங்கிருந்து திருப்பெரும்புதூர் (ஸ்ரீபெரும்புதூர்) செல்லும் சாலையில் சென்றால் திருக்கச்சூர் கோவிலை அடையலாம். இந்தக்கோவில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இங்கிருந்து சற்று தொலைவில் உள்ள மலையடிவாரத்தில் மருந்தீசர் கோயில் என்ற மற்றொரு சிவன்கோவிலும் உள்ளது.

**சிறப்புக்கள் :**

சிவபெருமான் சுந்தரருக்காக தனது கையில் திருவோடு ஏந்தி இரந்து (பிச்சை எடுத்து) சுந்தரரின் பசியைப் போக்கிய திருகோவில். அத்துடன் திருமால் இந்தக்கோவிலில் கச்சப (ஆமை) வடிவில் இருந்து சிவபெருமானை வழிபட்டார்.

**இறைவன் திருப்பெயர் :** கச்சூரெம்மான், விருந்திட்ட ஈச்வரர் (விருந்திட்டவீசர்)
**இறைவியார் திருப்பெயர் :** கன்னி உமையாள்
**கோவில்மரம் :** கல்லாலமரம், வேர்ப்பலா, ஆல்
**திருக்குளம் :** ஆமைக்குளம்
**பாமாலை:** சுந்தரமூர்த்தி நாயனாரின் திருப்பதிகம், 7ம் திருமுறை.

**கோவில் வரலாறு:**

திருக்கச்சூர் கோவிலானது ஆலக்கோவில் என்ற பெயருடனும் அழைக்கப்படுகிறது. இந்தக்கோவிலின் மூலவர் கச்சூரெம்மான். இருந்தாலும் இந்தக்கோவில் தியாகராச சுவாமி திருக்கோவில் என்றே அழைக்கப்படுகிறது. தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவபுரங்களில் தியாகராசர் திருமுன் உள்ள கோவில்களில் இந்தக் கோவிலும் ஒன்றாகும்.

அமிழ்தம் கிடைப்பதற்காக தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தார்கள். மந்தார மலையை மத்தாக்கி, வாசுகி பாம்பைக் கயிறாக்கி பாற்கடலைக் கடையும் சமயத்தில் மந்தார மலை கனம் தாங்காமல் மூழ்கத் தொடங்கியது. அது கடலில் மூழ்காமல் இருக்க திருமால் ஆமை (கச்சபம்) வடிவெடுத்து மந்தார மலையின் அடியில் சென்று மலையை தாங்கி நின்றார். திருமால் இவ்வாறு ஆமை உருவில் மலையின் கனத்தைத் தாங்கக்கூடிய ஆற்றலைப் பெற இந்தக்கோவிலுக்கு வந்து சிவபெருமானை வழிபட்டதாக வரலாறு கூறுகிறது. ஆமை (கச்சபம்) வடிவத்தில் திருமால் சிவபெருமானை வழிபட்டதால் இது திருக்கச்சூர் என்று பெயர் பெற்றது. இந்தக்கோவில் ஆதிகச்சபம் என்று அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் உள்ள ஆமைத் திருக்குளத்தில் நீராடி பதின்மும்மை நாட்களில் (பிரதோஷம்) கச்சூரெம்மானை வணங்கினால் எல்லா குறைகளும் நீங்கும். செல்வம், கல்வி, இன்பம் கிடைக்கும் என்று தலவரலாறு கூறுகிறது.

சிவபெருமான் சுந்தரருக்காக தனது கையில் திருவோடு ஏந்தி பிச்சை எடுத்து சுந்தரரின் பசியைப் போக்கிய கோவில் என்ற பெருமையும் திருக்கச்சூருக்கு உண்டு. இங்கு வந்த சுந்தரர் கோவிலினுள் சென்று சிவபெருமானை பேரன்புடன் வழிபட்டு வெளி வந்தார். வெகு தொலைவில் இருந்து திருக்கச்சூர் வந்த காரணத்தினால் களைப்பும் அதனுடன் பசியும் சேர்ந்து தள்ளாடியபடி கோவிலின் வெளியே உள்ள மண்டபத்தில் படுத்து கண்களை மூடுகிறார்.

அடியார்களை கண்ணிமை போல எப்போதும் காத்தருளும் சிவபெருமான் , சுந்தரரின் நிலையைக் கண்டு, அவரின் பசியை போக்கி அருள்புரிய நினைத்து ஓர் அந்தணர் உருவில் தோன்றி, சுந்தரரிடன் தோளைத் தட்டி எழுப்புகிறார். நான் சென்று உணவு கொண்டு வருகின்றேன், இங்கே இரும் என்று சுந்தரரிடம் சொல்லிவிட்டு, சிறிது நேரம் கழித்து உணவோடு வந்து அவரை எழுப்பி , அமரச் சொல்லி , வாழை இலை விரித்து அன்னம் பரிமாறி குடிக்க நீரும் கொடுக்கிறார். அன்னம் பலவித வண்ணங்களுடனும் பலவகை சுவையுடனும் இருப்பதைக் கண்ட சுந்தரர் காரணம் கேட்கிறார். சமைத்து உணவு கொண்டுவர நேரம் இல்லாததால் பல வீடுகளுக்குச் சென்று இரந்து (பிச்சை எடுத்து) உணவு வாங்கி வந்து கொடுத்ததாக அந்தணர் உருவில் இருந்த சிவபெருமான் சொல்கிறார்.

அந்தணர் செயலில் நெகிழ்ந்து போன சுந்தரர் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு , எதிரே உள்ள குளத்திற்குச் சென்று கைகளைக் கழுவிக் கொண்டு திரும்பி வந்து பார்த்தால் அந்தணர் உருவில் இருந்த சிவபெருமான் மறைந்து போயிருக்கக் கண்டார். இறைவனே தனக்காக திருக்கச்சூர் வீதிகளில் தனது திருவடிகள் பதிய நடந்து சென்று பிச்சையெடுத்து அன்னமிட்டதை நினைத்து இறைவனின் கருணையைக் கண்டு மனம் உருகினார் சுந்தரர், இறைவனை போற்றி (முதுவாய் ஓரி கதற) என்ற திருப்பதிகத்தைப் பாடி அருளினார்.

**பாடல்**

முதுவாய் ஓரி கதற முதுகாட்டு எரி கொண்டு ஆடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும் மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலி நீ கொள்ளக் கண்டால் அடியார் கவலாரே
அதுவே ஆமாறு இதுவோ கச்சூர் ஆலக் கோயில் அம்மானே

**கோவில் அமைப்பு**

ஊரின் நடுவே கோயில் உள்ளது. கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ள இந்த ஆலயத்திற்கு கோபுரமில்லை. கோவிலுக்கு எதிரில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. இது ஆமைத் திருக்குளம் என்று வழங்கப்படுகிறது. திருமால் ஆமைப் பிறப்பு எடுத்தபோது இக்குளத்தை உண்டு பண்ணியதாகக் கருதப்படுகிறது. இக்குளத்திற்கு அருகில் தான் சுந்தரர் பசிக் களைப்பால் படுத்திருந்த 16 கால் மண்டபம் இருக்கிறது. மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.




(06ஆம் பக்கம் பார்க்க)

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்று வருகின்றன. ஆடவை உத்தரம், சிலைத்திங்கள் திருவாதிரை ஆகிய இரு சிவநீராட்டு நாட்களில் சிவகாமி அம்மனுடனுறை ஆனந்தக் கூத்தப் பெருமான் வீதி வலம் வரும் நிகழ்வும் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது. இதன் போது மாணவர்கள் சுவாமி காவுதல், தீவட்டி பிடித்தல், குடை, கொடி, ஆலவட்டம் பிடித்தல், சாமரை வீசுதல் போன்ற சரியைத் தொண்டுகளை பாடசாலையிலே செய்யப் பழகிக் கொண்டனர்.

விஞ்ஞான பாடத்திற்கு ஆய்வு கூடங்களில் செயன்முறைப் பயிற்சி பெறுவது போல, சமய பாடத்திற்கு செயன்முறைப் பயிற்சி ஆலயத்தில் வழங்கப்படுகிறது. திருநாவுக்கரசு நாயனார் பாடிய "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப் புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி" என்ற தேவார வரிகளில் உள்ள வண்ணம், ஆலயத்தை கூட்டி சுத்தஞ் செய்தல் (திருவலகிடுதல்) , மண்டபத்தை நீரினால் கழுவுதல், விளக்குகளை மினுக்குதல், பூமாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், தோரணம், மாவிலை கட்டுதல்,சங்கு ஊதுதல், சேமக்கலம் அடித்தல், காண்டாமணி அடித்தல், கோலம் போடுதல் , ஆனந்தக் கூத்தனின் மற்றும் அம்பாளின் பொன்னாடைகளை மடித்துக் கொடுத்தல் போன்ற பலவகையான சரியைத் தொண்டுகளை மாணவர்கள் தினமும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தைப்பொங்கல், வருடப் பிறப்பு போன்ற முக்கிய தினங்களில் பொங்கல் பொங்கிப் படைத்து , சிறப்பான வழிபாடு நடை பெறுகிறது. பொங்கல் பானை வைக்கும் முறை, அரிசி போடும் முறை, வாழையிலை எந்தப் பக்கம் போட்டு படைக்க வேணும் போன்ற பலவிதமான விளக்கங்களையும் மாணவர்கள் செயன்முறையாகவே பெற்றுக் கொள்கின்றனர். மாசி மாதத்தில் சிவனிரவு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. காலையில் மாணவர்களுக்கு சைவ சமய தீட்சை வழங்கியும், இரவு நான்கு வேளைப் பூசைகளும் சிறப்பாக நடை பெற்றும். இடைநேரங்களில் மாணவர்களின் பண்ணிசை, பேச்சு , சிவபுராணம் ஓதுதல் போன்றவையும் நிகழப்பெறுகின்றன.

கல்விக்கரசியான சரசுவதியைக் கொண்டாடும் ஒன்பானிரா (நவராத்திரி) விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஒன்பானிரா நாட்களில் தினசரி பூசைகள் வகுப்புகளிற்கு பிரித்துக் கொடுக்கப்படும். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பூசைப் பொருள், பூமாலை, படையல் முதலியன கொண்டு வருதல் அல்லது தொண்டு செய்தல் என ஏதோ வகையில் ஈடுபாட்டுடன், பூசையிற் பங்கேற்பர். ஒவ்வொரு மாணவனுக்கும், மாணவிக்கும் தன்னுடைய பூசை என்ற உணர்வு மேலோங்க, ஒழுக்கத்துடன் ஆலயத்திற்கு வந்து, பூசைகளில் பங்கேற்று விரதமும் இருப்பர். ஒன்பது மாணவிகள் ஒன்பது சக்திகளாக அலங்கரித்து வருதலும் , கொலு வைத்தலும் சிறப்பான நிகழ்வாக இடம் பெறுகின்றன. சரசுவதி பூசையன்று வகுப்பிற்கொரு புத்தகம் பெறப்பட்டு, ஆலயத்தில் பூசையில் வைத்து பதின்மைப் பிறைநாளில் (விஜய தசமியன்று) எடுத்துப் படிப்பார்கள். அநேகமான மாணவர்கள் ஒன்பானிராமுழுவதும் விரதம் இருப்பார்கள். மற்றவர்கள் சரசுவதி பூசை 3 நாளும் விரதம் இருந்து அன்னை சரசுவதியின் அருளைப் பெறுவர்கள்.



தெ .து.ஜெயரத்தினம்

பதின்மைப் பிறைநாளில் (விஜய தசமியன்று) மாணவர்கள் வேட்டி, சால்வையுடனும் , மாணவிகள் முழுப் பாவாடை , தாவணியுடனும் பாடசாலைக்கு வருவார்கள். ஆலயப் பூசைகளில் பங்குபற்றி, மானம்பூ எனப்படும் வன்னி வாழை வெட்டு நிகழ்ச்சியை ஆவலுடன் பார்த்து, இறைவனுக்கு படைத்த உணவுகளைப் பெற்று, கலை நிகழ்வுகளிலும் பங்கு பற்றி, பண்ணிசை பாடியும், பேசியும், இசைக் கருவிகள் இசைத்தும், நடனம் ஆடியும் மகிழ்வாய் வீடு செல்வர். அன்று ஆலயத்தில் மாணவர்களின் இளைய சகோதரர்களிற்கும், அயலிலுள்ள குழந்தைகட்கும் ஏடு தொடக்கும் வைபவம் சிறப்பாக நிகழும்.

சமய குரவர் குருபூசைகள், சந்தான குரவர் குருபூசைகள் சிறப்பாக நடைபெறுவது வழமை . மாணிக்கவாசகர் குருபூசையன்று திருவாசக முற்றோதல் நிகழ்ந்து, மகேசுவர பூசையும் நடைபெறுகின்றது. நாளித் திங்கள் (கார்த்திகை சோமவாரங்களில்) திங்கட்கிழமைகளில் சிறப்புப் பூசை நிகழ்வதுடன், கார்த்திகை விளக்கீட்டிலன்று தீபங்கள் ஏற்றப்படுகின்றன. இவ்வகையாக திருவிழாக்கள் நடைபெறும்போது , விழாக்களின் தத்துவங்களை ஆசியர்கள் விளக்கிக் கூறுவதால் மாணவர்களிற்கு திருவிழாக்களின் முக்கியத்துவம் புரிந்து, பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பும் , இவற்றை தம் வாழ்வில் கடைப் பிடிப்பதோடு தம்முடைய குழந்தைச் செல்வங்களுக்கும் சொல்லித் தருகிறார்கள்.




# யாழ்ப்பாணத்தின் சைவப் பாசறை– மகாஜனக் கல்லூரி

விளையாட்டு, விஞ்ஞானம், கலை,இலக்கியம், வணிகம் போன்ற பிரிவுகளுக்கு கழகங்கள் இருக்கின்றது போல , சைவ சமய செயற்பாடுகளிற்கும் "சைவ வளர்ச்சிக் கழகம்" என ஒரு கழகம் இருக்கின்றது. ஆலயத்திற்கு மேற்குப் பக்கமாக இருந்த அறையில், இக்கழகத்தினர் நூலகம் ஒன்றை அமைத்ததுடன், "மகாஜன சைவ மஞ்சரி"என்ற மாதாந்த கையெழுத்து பத்திரிகையையும் வெளியிட்டு வருகின்றனர். மாணவர்கள் தாங்கள் சுயமாக தங்களிற்கு விரும்பிய சமய நூல்களை வாசிக்கவும், அவற்றைச் சிந்தித்து தெளிவு பெற்று கட்டுரைகள் எழுதவும், திருமுறைகளை மனனம் செய்யவும் கழகம் வழியமைத்துக் கொடுத்தது. இக்கழகத்தில் பலர் பொறுப்பாசிரியர்களாக இருந்த போதிலும் ஆசிரியர் திரு .ச. விநாயகரத்தினம் அவர்களின் காலம் பொற்காலம் எனலாம்.

பாடசாலை இடைவேளையின் போது, ஓய்வெடுக்காமல் ஆசிரியர் திரு .ச. விநாயகரத்தினம் அவர்கள் ஆலயத்தின் மேற்குப் பக்க அறையில் அமர்ந்திருப்பார். மாணவர்கள் தாங்கள் புதிதாக மனனஞ் செய்த திருமுறைகள், திருக்குறள் என்பவற்றை ஆசிரியரிடம் பிழையற ஒப்புவித்து, பயிற்சிப் புத்தகத்தில் அவரின் பெயரின் முதலெழுத்தும் இறுதியெழுத்தும் சேர்ந்த "விம்" என்ற கையொப்பத்தை பெற்றுக் கொள்வர். இதன் காரணமாக விவேகானந்த சபை, பரிபாலன சபை, சைவநெறிக் கழகம் போன்ற சமய நிறுவனங்கள் நடத்தும் பரீட்சைகளில் பெருந்தொகையான மாணவர்கள் பங்கு பற்றி வெற்றி பெற்று, தங்கப் பதக்கங்களையும், பெறுமதி வாய்ந்த பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்று தமக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்தனர். பன்னிரு திருமுறை முற்றோதல் செய்யவும், புராண படனம் நிகழும்போது பாடல்களை எழுத்துப் பிழையற உச்சரித்து, சந்தி பிரித்துப் படிக்கும் வல்லமையும் இதன் பயனாய் மாணவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற திருக்குறளிற் கிணங்க விநாயகரத்தினம் ஆசிரியர் அவர்கள் ஒவ்வொரு செயலுக்கும் பொருத்தமான மாணவரைத் தேர்ந்தெடுத்து, பொறுப்புகளை அவர்களிடம் கையளிப்பர். பின் அவர்களுக்கு உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும், மேற்பார்வை செய்யும் முறை பற்றியும் சொல்லிக் கொடுத்து ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்கினார்.

நாயன்மார்களில் இருவரான திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப் பெற்று, ஆறுமுகநாவலரால் தேன்பொந்து என்று குறிப்பிடப் பெற்ற திருக்கேதீச்சர ஆலயத்தில், மகாஜனாக் கல்லூரியினர் திருவிழாவில் ஐந்தாம் நாள் பகல் திருவிழாவை 1955ம் ஆண்டிலிருந்து எடுத்து, தொடர்ந்து செய்து வருகிறார்கள். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பெருந்தொகையானோர் இந்நாளில் திருக்கேதீச்சரம் சென்று "சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும் கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்" திருவடிகளைப் பணிந்து வணங்கி வழிபட்டு வருகின்றனர்.

மாருதப்பிரவீகவல்லி எனும் சோழ இளவரசியின் குதிரை முகத்தை மாற்றி , அழகிய மனித முகம் வழங்கிய, பழம்பெருமை வாய்ந்த மாவிட்டபுரம் கந்தன் திருக்கோவிலும் திருவிழாக் காலத்தில் பதினேழாவது நாள் திருவிழாவை ( பகலும் இரவும்) மகாஜனாக் கல்லூரியினர் பொறுப்பேற்று பல காலமாகச் சிறப்பாக செய்து வருகிறார்கள். மாணவர்கள் ஆலய வீதிகளை சுத்தஞ் செய்து, கழுவி, மாவிலை, தோரணம் இட்டு, அன்று கடவுள் நீராட்டுக்கு பால்,தயிர், இளநீர், கரும்பு, பழ வகைகள், பூசைத் தட்டங்கள், பூ மாலைகள், என்பவற்றை கொண்டு சென்று, "முருகன், குமரன், குகன், என்று மொழிந்து" மாவிளக்கு இட்டு , வாகனம் காவுதல், கற்பூரச் சட்டி எடுத்தல், பிரதிட்டை செய்தல் போன்றவற்றையும் செய்து, முருகப் பெருமானின் திருவருள் பெறுவதுடன், தமிழ்கடவுளுக்கு படைத்த ஆறுவகை படையல்களை பெற்று மகிழ்வுடன் வாழ்கின்றனர்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில் சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி நான்ற மலப்பதத்தே நாடு." என்று மனவாசகங் கடந்தாரால் பாடப்பெற்ற, தனது ஆனந்தக் கூத்தினால் ஐந்தொழில்களைச் செய்து வருகின்ற சிவகாமி அம்மனுடனுறை ஆனந்தக் கூத்தப் பெருமானின் அருளுடன் தான், பாடசாலையில் நடக்கும் எல்லா நிகழ்வுகளும் ஆரம்பிக்கும். மாணவர்கள் போட்டிகளுக்குச் செல்ல முன் பொறுப்பாசிரியருடன் கூத்தனிடம் சென்று வழிபாடு செய்தே செல்லும் நடைமுறை இன்றும் வழக்கில் உள்ளது.

பாடசாலை வளாகத்துள் சைவ உணவு மட்டுமே உண்ணும் வழக்கம் இன்றும் கடைப் பிடிக்கப் படுகிறது. எந்த நிகழ்வானாலும், எந்த விருந்தானாலும் சைவ உணவு மட்டுமே பரிமாறப் படுகிறது. மாணவர்கள் தங்கள் தேவைக்கு உணவு வீட்டில் இருந்து கொண்டு வருவதானாலும் சைவ உணவு மட்டுமே கொண்டு வர அனுமதி உள்ளது. ஐம்பெரும் குற்றங்களான பொய் சொல்லுதல் , களவு எடுத்தல் , சூது ஆடுதல் , கொலை செய்தல், மது, மாமிசம் உண்ணல் என்பவற்றை செய்யாமலிருக்க வேண்டும் என வலியுறுத்தி , பாடசாலை வளாகத்தினுள் இவற்றை அனுமதிப்பதில்லை,

சிவகாமி அம்மனுடனுறை ஆனந்தக் கூத்தப் பெருமான் ஆலயத்தில் 06.09.1976ல் மீளமைப்பு கடவுள் மங்கல நன்னீராட்டும் , 1982ல் மாணிக்க வாசகர் சிலை எழுந்தருளல் மற்றும் 02.07.1985 ல் மீண்டும் கடவுள் மங்கல நன்னீராட்டும் நிகழ்ந்துள்ளன. நாட்டின் அசாதாரண சூழலிலும் , மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்தாலும் கூத்தப் பெருமான் இங்கிருந்து இடம் பெயரவில்லை. 2009ம் ஆண்டில் பாடசாலைக் கட்டிடங்கள் திருத்தப்படும் போது , கோவில் புத்தாக்கம் செய்ய புதிய இடத்தில் அத்திவாரமிடப்பட்டு 12.09.2010ல் மீண்டும் மிகச்சிறப்பாக கடவுள் மங்கல நீராட்டு நடைபெற்றது.

"உனை நீ அறி" என்ற கல்லூரியின் மகுட வாசகத்தை ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது, அதனுள் பொதிந்திருக்கும் சைவ சித்தாந்த தத்துவங்களை உணர, கோவில் வழிபாடும், தொண்டுகளும் பேருதவி புரிகின்றன என்பது வெள்ளிடைமலை. மகாஜனக் கல்லூரி மாணவர்கள் சிவகாமி அம்மனுடனுறை ஆனந்தக் கூத்தப் பெருமானின் திருவடிகளைத் தினமும் வணங்கி, கல்வி, விளையாட்டு, கலைகள் என்பவற்றில் சிறந்தோங்கி அன்பும் அறமும் பண்பும் உடைய சிறந்த மனிதர்களாக , நால்வேதங்களாகிய அறவழி நின்று , பொருள் ஈட்டி , இன்பமாய் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சிவப்பேற்றினை அடையும் வழிகளை காட்டிய அனைத்துப் பெரியோர்களையும் நினைந்து போற்றுகின்றோம்.

**குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.**

*திருநாவுக்கரசு நாயனார்*

# சொற்சிலம்பம் - 2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 | |
| | ■ | | ■ | ■ | 4 | | |
| 5 | | | | | | | ■ |
| | ■ | | ■ | ■ | | ■ | 6 |
| ■ | 7 | ■ 8 | | | | ■ | |
| 9 | | | | | ■ | 10 | |
| | | ■ | 11 | | | | |
| | | ■ | 12 | | ■ | | |

**இடமிருந்து வலம்**

1. தமிழ் மூவாயிரம் தந்த நாயானார்
3. மரம்
4. முதல் சித்தர்
5. நித்திரை கொள்ளுதல்
8. ஆழ்ந்து தனித்திருத்தல்
9. முருகன்
11. சிவனின் திருக் கொலங்களில் ஒன்று (திரும்பி)
12. அறிவித்தால் அறிவது

**மேலிருந்து கீழ்**

1. மாதம்
2. கருவறையில் உறையும் கடவுள்
4. உடைந்து நெருங்குதல்
6. சிவ மூல மந்திரம்
7. திசைகளில் ஒன்று
9. அறியாமையை நீக்குவது
10. சிவனின் கழுத்தில் தங்கியது

இக்குறுக்கெழுத்து சட்டகத்தைப் பூர்த்திசெய்து பெயர், முகவரி, தொடர்பு இலக்கத்துடன் அனுப்பி வைக்கும் வாகசர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
25.12.2020
**அனுப்பவேண்டிய முகவரி:**
தென்னாடு, செந்தமிழாகம சிவமடம்,
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

# சொற்சிலம்பம் - 1இன் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | த | ம் | 2 ப | ர | ம் | ■ | 3 ச |
| ம் | ■ | 4 வி | தி | ■ | 5 ல | ட | க |
| 6 ம | ம | 7 தை | ■ | 8 ப | 9 சு | ■ | ல |
| ம் | ■ | ப | 10 ந | வ | ந் | ■ | ர் |
| ■ | ■ | பூ | ல் | ண | த | 11 அ | ■ |
| 12 வீ | ■ | ச | லூ | 13 வ | ர | ம் | ■ |
| பூ | ■ | ம் | ர் | ர | ர் | ம் | 14 ஓ |
| 15 தி | ரு | ■ | ■ | ச | ■ | ன் | ம் |

## வியக்க வைக்கும் வாரியார்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவற்ற சிறுவர்களுக்காக 27 லட்ச ரூபாய் நன்கொடை வசூலித்து, திருப்பராய்த்துறையில் 'இராமகிருஷ்ண குடில்' அமைத்தார். தான் பிறந்த காங்கேய நல்லூரில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றை நிறுவினார். பள்ளிக்கு என உதவி கேட்டால் உடனே செய்வார்!

'ஏழைகள், மாணவர்கள், விதவைகள், மருத்துவ உதவி வேண்டுவோர் எனப் பல தரப்பினருக்கும் நிதி உதவி செய்திட, 'திருமுருக கிருபானந்த வாரியார் பொதுநல நிதி அறக்கட்டளை' ஒன்றைத் தன் சொந்தப் பணத்தில் அமைத்தார்!

பல திருக்கோயில் பணிகளைச் செய்தார் அதிலும் குறிப்பிடத் தக்கது வடலூர் கோயில் மற்றும் வயலூர் கோயில் திருப்பணி. வயலூர் முருகப்பெருமான் சுவாமிகளை ஆட்கொண்டு அக்கோயில் திருப்பணியை செய்து கொண்டார். அப்போது செய்தித்தாளில் எழுத்து பிழையாக வயலூர் திருப்பணி என்பதற்கு பதிலாக வடலூர் என்று வெளியானது. உடனே சுவாமிகள் அதுவும் இறை திருவருள் போலும் என்றெண்ணி வடலூர் திருப்பணியையும் செய்து முடித்தார். அப்பணியில் ஒன்றை குறிப்பிட்டு சொல்ல வேண்டும், வடலூரில் வள்ளலார் அருளிய அருட்பெருஞ்சோதி அகவல் என்பதை கல்வெட்டில் பதிக்க எண்ணி அரும்பாடு பட்டு பணியாற்றினார். அருட்பெருஞ்சோதி அகவல் கிட்டத்தட்ட 798 கண்ணிகள் (1596 வரிகள்), இவையனைத்தையும் அங்குள்ள கல்வெட்டில் இன்றும் காணலாம். நாம் ஒரு வரி எழுதுவதற்குள் எத்தனையோப் பிழைகள் ஏற்படுகிறது, ஆனால் அவ்வளவு வரிகள் கொண்ட கல்வெட்டில் ஒரு சிறு சந்திப் பிழை கூட இருக்காது, அதுவே வாரியார் சுவாமிகள் எவ்வளவு உழைத்திருப்பார் என்பதை பறைசாற்றுகிறது.

தன்னை இகழ்ந்து பேசியும் எழுதியும் வந்த ஒருவர் பொருளாதார நிலையில் நலிவுற்ற போது அவர்தம் குடும்பத்தை தாங்கிப்பிடித்து வேண்டிய உதவிகளைச் செய்தார், அத்தகைமை தரணியில் எங்கும் காண முடியாதது. வாரியார் சுவாமிகள் மீது ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு பதிந்தார், உடனே அருகிருந்த என்னுடைய தந்தையார் வருத்தத்தோடு பேசிய போது, சுவாமிகள் "மழை பெய்யும் போது மலை நனைகிறேதே என்று யாராவது வருத்தப்படுவார்களா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டதாக எந்தையார் அடிக்கடி நினைவு கூர்வார். பகைவனுக் கருள்வாய்-நன்னெஞ்சே என்ற வரிகள் தாம் நினைவில் வந்து செல்லும்.

தான் வணங்க ஆரம்பித்த முருகப்பெருமானைத் தொடர்ந்து 57 ஆண்டுகள் ஒரு நாளும் இடைவிடாமல் வழிபாடு செய்தமை மற்றுமொரு வியப்பு. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது என்ற வள்ளுவத்தின் வாக்கிற்கு இணங்க நாளும் தன் வாழ்க்கையை வாழ்ந்த காரணத்தால் தான் என்னவோ முருகப்பெருமான் சுவாமிகளை திருத்தணிமலை மீது வானூர்தியில் பறக்கும் போது வானோடு வானாக கலந்தாட்கொண்டார்.

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே

என்ற ஔவையின் பாடல் வரிகளுக்கு இலக்கணமாக திகழ்ந்தவர் வாரியார் சுவாமிகள் என்று சொன்னால் அது மிகையாகாது.

வள்ளல் வாரியார் சுவாமிகள் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம் இருப்பினும் சுருக்கம் கருதி, இம்மட்டும் நிறைவு செய்கின்றேன். அப்பெருமகனாருக்கு எந்தையார் முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் இயற்றிய வாழ்த்துப்பாடலை இந்த இடத்தில் நினைவு கூர்தல் சாலப் பொருந்தும் என்றதனை எடுத்துரைத்து இருவரையும் வணங்கி மகிழ்கின்றேன்.

வார்சடையார் சைவச் சூரியனார் வாழி
வண்கிருபா னந்த வாரியவர் வாழி
நேர்கிடையா அருண கிரித்தோன்றல் வாழி
நாயன்மார் அறுபான் நாலாவார் வாழி
தேர்த்தடையாய் இளைஞர் நெறிசெய்வார் வாழி
திருக்கோயிற் பணிகள் பலசெய்தார் வாழி
ஏர்ப்படையாம் வேலை ஏலண்ணல் அருளால்
எஞ்ஞான்றும் வாரி யார்சுவாமி வாழி!!

## ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கிலுள்ள நுழைவாயில் வழியாக உள்ளே சென்றவுடன் கிழக்குப்புற வெளி வீதியில் கொடிமரம், நந்தி, பலிபீடம் ஆகியவை அமைந்துள்ளன. தெற்குப்புற வெளி வீதியில் 27 தூண்களை உடைய நாண்மீன் மண்டபம் உள்ளது. நாண்மீன் மண்டபத்தைக் கடந்து நேரே சென்றால் தியாகேசர் திருமுன் உள்ளது.

திருமாலுக்கு இக்கோவிலில் இறைவன் தனது நடனத்தைக் காட்டி அருளியுள்ளார். நாண்மீன் மண்டபத்தில் உள்ள ஒரு தூணில் ஆமை உருவில் திருமால் சிவலிங்கத்தை வழிபடும் சிற்பம் ஒன்று உள்ளது.மண்டபத்தில் உள்ள தெற்கு வாயில் வழியே உள்ளே சென்றால் இறைவி கன்னி உமையாள் திருமுன் (சந்நிதி) உள்ளது. நான்கு கைகளுடன் நின்ற நிலையில் அம்பாள் அருள்மழை பொழிந்து கொண்டிருக்கிறார். வலம் வருவதற்கு வசதியாக அம்மன் திருமுன் (சந்நிதி) ஒரு தனிக் கோவிலாகவே உள்ளது.

அம்பாள் திருமுன் முன் உள்ள மண்டபத்திதிருந்து மற்றொரு கிழக்கு நோக்கிய வாயில் வழியாக உள்ளே சென்றால் கருவறையில் கிழக்கு நோக்கிய திருமுன்னில் இறைவன் கச்சூரெம்மான் காட்சி தருகிறார்.

திருமாலுக்கு அருளிய இவர் ஓர் தான்தோன்றி லிங்கமாவார். கருவறை அகழி போன்ற அமைப்பு கொண்டது. கருவறை சுற்றில் தென்கிழக்கில் வடக்கு நோக்கிய நால்வர் திருமுன்னையும் காணலாம். கருவறை சுற்று வலம் வரும்போது வடக்குச் சுற்றின் வடகிழக்கு மூலையில் ஆடல்வல்லான் திருமுன் அமைந்துள்ளது.

வடக்கு வெளிப் புறவீதியில் கிழக்கு நோக்கி முருகன் திருமுன் மற்றும் விருந்திட்ட ஈச்வரர் திருமுன்னும் அமைந்திருக்கின்றன. விருந்திட்ட ஈச்வரர் திருமுன்னுக்கு அருகே வடக்கு நோக்கிய சுந்தரர் திருமுன்னும் அமைந்துள்ளது. வடக்கு வெளிப்புற வீதியில் தெற்கு நோக்கிய பைரவர் திருமுன்னும் இருக்கிறது.

இந்தக்கோவிலில் உள்ள பைரவர் திருமுன்னும் மிகவும் சிறப்பு வாய்ந்தது.சுந்தரருக்காக பிச்சை எடுத்த சிவன், இரந்த ஈச்வரர் என்ற பெயரில் கோயிலுக்கு வெளியே சற்று தூரத்திலும், விருந்து படைத்த சிவன் விருந்திட்ட விருந்திட்ட ஈச்வரர் என்ற பெயரில் வீதியில் தனித்திருமுன்னாகக் காட்சி தருகிறார்.

மருந்தீசர் திருக்கோயில் (மலையடிவாரக் கோயில்)

திருக்கச்சூர் கோவிலில் இருந்து இருந்து சற்றுத் தொலைவில் மருந்தீசர் கோயில் என்ற மற்றொரு சிவன்கோவில் உள்ளது.ஈசன் என்றால் ஈபவன் என்று பொருள் , அதாவது இங்கு மருந்து தருபவன் என்று பொருள் எடுக்கலாம்

இந்திரன், தான் பெற்ற சாபத்தின் பலனால் நோய் உண்டாகி அவதிப்பட்டான். சிவன் இத்தலத்தில் மருந்து இருக்கும் இடத்தை காட்டி அருள்புரிந்தார். இந்திரனுக்கு மருந்து கொடுத்தவர் என்பதால் சிவனுக்கு மருந்தீசர் என்ற பெயர் ஏற்பட்டது. அம்பாளை இருள்நீக்கி அம்பாள் என்றழைக்கின்றனர். சுந்தரர் இந்து சிவனை, "மாலை மதியே மலைமேல் மருந்தே" எனப் பாடியுள்ளார்.

மேலை விதியே விதியின் பயனே விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை யெழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே மறவே னடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே

இவ்வூரில் அமைந்துள்ள மலைக்கு ஔடதகிரி எனும் பெயருண்டு. கோயில் கொடிமரத்தின் அருகில் சிறிய மண் குழி ஒன்று உள்ளது. இம்மண்ணை மருந்து என்கிறார்கள். இதனை உட்கொள்ள நோய்கள் நீங்கும் என்பது நம்பிக்கை. மருந்தீசர் திருக்கோயிலில் கிரிவலம் சிறப்பு என்னவென்றால் எல்லா நாட்களிலும் எந்த நேரத்திலும் கிரிவலம் வரலாம்.மருந்தீசர் இருள் நீக்கி அம்மையாரை வணங்கினால் சகல பிணிகளிலிருந்தும் விடுபடலாம் என்பது நம்பிக்கை. நிறைமதி (பௌர்ணமி) நாட்களில் வெற்றுடம்புடன் கிரிவலம் வந்தால் மூலிகைகள் அடங்கிய காற்றுபடுவதால் உடலில் உள்ள நோய்கள் அகலும் என்பதும் இந்தக்கோவிலின் சிறப்பு.

மலையில் மருந்தீசர், அடிவாரத்தில் இரந்தீசர், விருந்தீசர் என மூன்று கோலங்களில் சிவன் அருள் செய்யும் கோவில் இது. சிவன் தனது மூன்று கண்களின் குறிப்பாகவும் , முக்காலத்தை உணர்த்துவதாகவும் இக்கோலத்தை சொல்கிறார்கள். காஞ்சிவரலாற்றில் ஆதி காஞ்சி என்று இந்தக்கோவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கோவில் இருக்குமிடத்தில் பிறந்தாலும் , வாழ்ந்தாலும், வந்து வணங்கிச் சென்றாலும் சிவப்பேற்றினை தரும் சிவன்கோவிலாக இதனை போற்றிச் சொல்கின்றனர் அடியவர்கள்.

கோவில் செல்வதற்கான உதவி மற்றும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயண கட்டுரை ஆசிரியரை தொடர்புகொள்ளலாம்.

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்,**
**உதவிப் பேராசிரியர்,**
SRM **கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
+919003296221 | easanaithedi.in

# தென்புலத்தார் வழிபாடு

**சிவத்திரு . திருவம்பலம் தென்னவன்**

**கடந்த மாதத் தொடர்)**

**மண்மருளத் துடிகறங்க**
**விண்மேயாற்குக் கல்கொண்டன்று**

- நீரையும் மலரையும் சிதறி நறும்புகை காட்டி மணிகளை ஒலிக்கச் செய்து, பகைவரது சினத்தைக் கிளறிப் போரில் மாண்டவனுக்கு நடுகல் கல்லை எடுத்து கொணர்தல்.

### நீர்ப்படை - கல் நீர்ப்படுத்தல்

**வண்டுசூழ் தாமம் புடையே அலம்வரக்**
**கண்டு கொண்ட கல்நீர்ப் படுத்தன்று**

- காடே எரியும் வண்ணம் கதிரவன் வெப்பத்தைப் பொழிதலால், அந்த வெப்பம் தணிய நறுமணப் பொருள்களால் நீராட்டி வாவியில் கல்லை இட்டனர். பின்னர் அதனை சுத்தப்படுத்தி எழுந்தருள செய்வதற்கான ஆயத்தமாக இந்த படியை செய்தனர்.

### நடுதல் - எழுந்தருள செய்தல்

வீரனுடைய பெயரைக் கல்லில் செதுக்கி அதாவது கல்லினை அடையாளப்படுத்தி அக்கல்லை நடுதல். முழுமையாக சிலைசெய்யமுடியாத காலத்தில் பெயரினை மட்டும் எழுத்து வடிவமாக எழுதி கல்லினை நட்டனர்.

**மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்**
**பீலி அணிந்து பெயர்பொறித்து – வேல்அமருள்**
**ஆண்தக நின்ற அமர்வெய்யோற்(கு) ஆகுஎன்று**
**காண்தக நாட்டினார் கல்**

மாலைசூட்டி, மணி ஒலித்து, மயிற்பீலியைச் சூட்டி, அவன் பெயரை எழுதி வேற்போரில் ஆண்மைத்தன்மை வெளிப்படப் போரிட்ட வீரனுக்கு இது உருவமாகட்டும் என்று காணுமாறு கல்லை நட்டார்கள்' . இதனையே தற்போதைய ஆகமங்களில் எழுந்தருள செய்தல் என்று கொள்ளலாம்.

### பெரும்படை - கல் முறைப் பழிச்சல்

**நிழலவிர் எழில்மணிப்பூண்**
**கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று** - ஒளி வீசும் அழகிய மணிஅணியையும் வீரக்கழலையும் உடைய வீரனுக்கு எடுக்கப்பட கல்லைப் புகழ்தல் என்பது பொருள்.இறந்த வீரனின் சிறப்புக்களை மற்றும் அவனின் வீரச்செயல்களைக் குறித்து போற்றி விழா எடுத்தலும் வாழ்த்துதலும் என்று பொருள் கொள்ளலாம்.

### வாழ்த்துதல் - இற்கொண்டு புகுதல்

**வேத்த மருள் விளிந்தோன் கல்லென**
**ஏத்தினர் துவன்றி இற்கொண்டு புக்கன்று** - வேந்தர்களுக்கிடையிலான போரில் இறந்தவனுக்கு எடுக்கப்பட்ட கல் என்று சொல்லி வாழ்த்தி ஒன்றுகூடிக் கோயில் எடுத்தல்' என்பது இதன் விளக்கம். இவ்வாறே தமிழர் வழிபாடுகள் ஆரம்பமாயின என்று இலக்கியப்பார்வையில் உறுதி படச்சொல்லமுடியும். இவைகளே பின்னர் கோவில்களாகவும் ஆகமங்களாகவும் மாறின என்றால் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

போரில் மரணமடைந்தவர்கள் தம் குடிகளைக் காக்க வந்தவர்களாகவும் அவர்கள் தம்மைக் காவல் செய்கிறார்கள் என்பதனையும் மக்கள் நம்பினர். பிற்காலத்தில் இவர்கள் குலதெய்வங்களாகவும் காவல் தெய்வங்களாகவும் மாறுகின்றனர்.ஆகவே நடுகல் வழிபாடே முன்னோரை தெய்வமாகப் போற்றி வழிபடும் மரபை முதன்முதலில் எடுத்துக்காட்டி நிற்கிறது.

**களிறுபொரக் கலங்கு, கழன்முள் வேலி,**
**அரிதுஉண் கூவல், அங்குடிச் சீறூர்**
**ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை**
**நடுகல் கைதொழுது பரவும், ஒடியாது**
**விருந்து எதிர் பெறுகதில் யானே என்னையு**
**மோ............வேந்தனொடு,**
**நாடுதரு விழுப்பகை எய்துக எனவே – அள்ளூர் நன் முல்லையார்**
**பாடல் –** *புறநானூறு*

யானைகள் மிதித்து இடையிடையே சிதைந்த முள்வேலியும், மக்கள் அரிதாகவே வந்து உண்ணும் நீர்நிலையும் உடைய சிறிய ஊரிலே வாழ்ந்தாள் ஒரு மறக்குல இளையவள் , விருந்தினர்கள் என் இல்லத்துக்கு வரவேண்டும் என்றும் என் கணவனுக்கும் வேந்தனுக்கும் நாடு விரிவாக்கும் பகைவனோடு போர் வரவேண்டும் என்றும் அதில் அவர்கள் வெல்லவேண்டும் என்றும் தன் குடி முன்னோரின் நடுகற்களை கைதொழுது பரவுகிறாள். இப்படித்தான் நீத்தார் வழிபாடு ஆரம்பமாகிறது. கல்லை கணவனாக்கி ஃ வீரனாக்கி கடைசியில் காவல் தெய்வமாக்குகிறார்கள்.இதிலிருந்து தான் தமிழர் வழிபாட்டு முறைகள் ஆரம்பமாகின்றன.

### தென்புலத்தார் வழிபாடு

குமரிக்கண்ட கடல்கோளின் பின்னர் , அங்கே அதாவது தெற்கே வாழ்ந்து கடல்கோளில் காவுகொள் ளப்பட்ட மக்களை நினைத்து முன்னெடுக்கப்பட்ட நீத்தார் வழிபாடுகளே தென்புலத்தார் வழிபாடு என்றாகியது.

**பஃறுளி யாற்றுடன் பன் மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு,**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி -** *சிலப்பதிகாரம்*

**மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்**
**மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு இடம்படப்**
**புலியொடு வில் நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை**
**வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன் -** *கலித்தொகை*

தென்புலம் , தென்னாடு என்றழைக்கப்பட்ட குமரிக்கண்ட நிலத்தின் இலக்கிய குறிப்புகள் மேலே காட்டப்பட்டுள்ளன. இங்கு இருந்த பெருமளவான மக்கள் கடல்கோளினால் காவுகொள்ளப்பட்டனர் என்று நம்பப்படுகிறது. தெற்கினை யம திசை என்று மக்களுக்கு பயமூட்டியதற்கு இந்த கடல்கோளும் காரணமாகவிருக்கலாம். அத்துடன் தெற்கே கால் நீட்டி துயில் கொள்ளக்கூடாது என்பதும் , எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து மடிந்த மண்ணிற்கு காலை நீட்டாமல் அவர்களுக்கு மரியாதையை செய்வதாகவும் இருக்கலாம்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை -** *திருக்குறள்*

தென்திசையில் உள்ள இறந்த மூதாதையர் கள்,தெய்வங்கள்,விருந்தினர்கள்,உற்ற குடும்பத்தார்கள் உறவினர்கள் சுற்றத்தார்கள், தான் என்னும் தன்னை ஆக்கிய ஐந்து வகையாரையும் பேணி வளர்த்து உபசரித்து சீர்தூக்கிப் போற்றி வாழ்வதே சிறப்பாகும். அதுவே இல்வாழ்க்கையின் அறமாகும். திருக்குறளை தமிழ்வேதம் என்று பாராட்டுபவர்கள் குமரிக்கண்டம், தென்புலம், தென்புலத்தார் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்பதற்கு இந்தக்குறள் ஒரு சான்றாக அமைகிறது.

இந்தியாவில் கன்னியாகுமரி, ராமேசுவரம் கடல்பகுதியில் தெற்கு நோக்கி மக்கள் மறைந்த மக்களை வழிபாடு செய்யும் வழமை இன்றும் இருந்து வருகிறது. யா - என்றால் தெற்கு , தரை என்பது இடம் ஃ நிலம், யாத்தரை என்பது யாத்திரை ஆகி , தற்போது யாத்ரா ஆகிவிட்டது. இது எல்லாமே பண்டைத்தமிழர் வாழ்வியலும் பண்பாடும் சார்ந்தவையே.

டெம்பிள் (Temple) என்ற ஆங்கில வார்த்தையின் கருத்து தென்புலம் என்னும் தென்னாடு என எடுக்கலாம்

தென்புலம் என்ற சொல் இலத்தீனில் Templum என்றழைக்கப்பட்டிருக்கலாம். அது பின்னர் ஆங்கிலத்தில் வுநஅிடரஅ இலிருந்து வுநஅிடந ஆகியிருக்கலாம். அதாவது மூத்தோர் மற்றும் தென்புலத்தார் வழிபாடே மனித நாகரிகத்தில் வழிபாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தியிருக்கிறது என்று பெருமைப்படுவதில் தமிழர்களாகிய நாம் மகிழ்ச்சி கொள்ளவேண்டும். அத்துடன் இதனை உலகத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும்.



### தென்புலத்தார் வழிபாடுகளும் வழிபாட்டுக் காலங்களும்

நீத்தார் வழிபாட்டிற்கு தென்புலத்தார் வழிபாடு என்ற பெயர்வரக் காரணத்தை முன்னர் விளகியிருந்தேன்.

பிறப்பினை நாள்மீன் (நட்சத்திரத்தினை வைத்தும்) இறப்பினை நிலவுடன் தொடர்பாக பிறைநாளினை (திதியை) வைத்தும் குறிப்பிட்டனர் பண்டைத்தமிழர். இது பொதுவாக பகல் / இரவு, எழுச்சி / வீழ்ச்சி என்ற தத்துவத்தில் வந்திருக்கலாம். ஆனால் நிச்சயமா விஞ்ஞான விளக்கம் இருக்கும் அதுபற்றிய முழுமையான அறிவு எனக்கு இல்லை.

சூரியன் முதலான கிரகங்களை கோள்மீன் என்றும், நட்சத்திரங்களை நாள்மீன் என்றும் சொல்வது பண்டைத் தமிழ் மரபு. சூரியன் செல்லும் வீதியில் 12 வீடுகள் உள்ளன என்றும், அவற்றுள் மேடராசியே முதலில் உள்ளது என்றும் ”நெடுநல்வாடை“ கூறுகிறது. (இது சங்கத் தமிழ் இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும்)

**மெழுகு செய் படமிசைத்**
**திண் நிலை மருப்பின் ஆடு தலையாக**
**விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து -**
*நெடுநல்வாடை 161*

மெழுகு தேய்த்த மேல் பகுதியில் வலிமையான கொம்புடன் ஆடு (மேடராசி) முதலாக விண்ணில் ஊர்ந்து திரியும் ஓவியம் இருந்தது. இதிலிருந்து மேடராசி தான் முதலாவது வீடாக ஃ ராசியாக குறிக்கப்படுகிறது.

சூரியனின் பயணத்தினை இரண்டாகப் பிரிக்கலாம். இதில் சூரியன் மகரராசியில் இருந்து மிதுனராசி வரைக்கும் திங்களில் (மாதத்தில்) சுறவம் (தை) முதல் ஆடவை (ஆனி) வரை இருக்கும் காலம் ஆண்டுப்பகல் படைப்புருவாக்க காலமெனவும் அதாவது சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் காலம் (வடபுலப்பயணம் - உத்தராயணம்) எனவும் பின்னர் சூரியன் கடகத்தில் இருந்து தனுசு ராசி வரைக்கும் திங்களில் (மாதத்தில்) கடகத்தில் (ஆடியில்) இருந்து சிலை (மார்கழி) வரை ஆண்டிரவு ஒடுக்க காலம் அதாவது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் காலம் (தென்புலப்பயணம் - தக்ஷிணாயணம்) எனவும் பிரிக்கலாம்.

தென்புலப்பயணம் தூய்மைப்படுத்துவதற் கானது, வடபுலப்பயணம் ஞானமடைதலுக்கானது என்று மரபுவழி பின்பற்றப்படுகிறது. பீசுமர் அம்புப்படுகையில் சிலைத்திங்களில் (மார்கழியில்) இருந்து சுறவத்திங்கள் (தை) வரை உயிரை விடாமல் வடபுலப்பயணம் ஞானமடைதலுக்கானது என்று காத்திருந்து உயிரை விட்டார். ஏனெனில், இயற்கையின் இந்த மாற்றத்தை உபயோகித்து அவர் தன்னிலை மாற்றத்தை சாத்தியமாக்க விரும்பினார்.அதுபோல சித்தாத்தர் (புத்தபெருமான்) அவர்களும் வடபுலப் பயணத்தின் மூன்றாவது நிறைமதி நாளில் ஞானம் அடைந்தார்.

அத்துடன் இந்த காலப்பகுதியில் வளர்ச்சி , செழிப்பு அறுவடைக்கு உகந்த காலமாகும். தமிழர் திருநாளாகிய தைப்பொங்கலும் வடபயண முதல்நாளிலே கொண்டாடப்படுகிறது.

வடபுலப்பயணத்தில் வரும் மறைமதியானது சுறவமறைமதி (தை அமாவாசை) எனவும் தென்புலப் பயணத்தில் வரும் மறைமதியானது கடகமறைமதி (ஆடி அமாவாசை) எனவும் கொண்டாடப்படுகிறது.

நீத்தார் நாள் (இறந்ததினம்) மற்றும் நீத்தல் பிறைநாள் (திதி) வழிபாடுகள்

உங்கள் அப்பாவோ, அம்மாவோ , உடன்பிறந்தோரோ அல்லது உறவினரோ சிவபுரம் அடைந்தால் (மறைந்தால்), அது நிச்சயமா வீடு பெறுதலே. அவர்களின் ஆன்மாவைப் பொறுத்தவரை உடம்பெனும் சிறையில் இருந்து விடுதலை பெற்று எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களில் சென்றடைகிறார்கள். அவர்கள் நாள், இறந்தநேரம் என்ன பிறைநாள் (திதி) இருக்கிறதோ அதுதான் அவர்களின் இறந்தகாலத்தினைக் குறிக்கும் பிறைநாள் கணக்கு (திதி).

பிறைநாள் (திதி) என்பது நிலவின் அசைவில் வைத்து கணிக்கப்படுகிறது. பதினாறு பிறைநாட்கள் இருக்கின்றன. இவற்றினை தமிழில் அதாவது உருவாக்கப்பட்ட மொழியில் பார்த்தால் காரணத்துடன் விளக்கமும் கிடைக்கும்.மறைமதி (அமாவாசை) அடுத்து ஒருமை ( பிரதமை) , பின்னர் இருமை (துவிதியை) , மும்மை (திருதியை) , நான்மை (சதுர்த்தி) , ஐம்மை (பஞ்சமி) , அறுமை (சஷ்டி), எழுமை (சப்தமி), எண்மை (அஷ்டமி), தொண்மை(நவமி), பதின்மை (தசமி), பதிற்றொருமை (ஏகாதசி), பதிற்றிருமை (துவாதசி), பதின்மும்மை (திரயோதசி), பதினான்மை (சதுர்த்தசி), நிறைமதி (பௌர்ணமி) என்று வளர்கிறது தேய்கிறது.

உதாரணமாக அம்மா அல்லது அப்பா பதிற்றிருமை (துவாதசி) பிறைநாளில் இறந்தால், மாதந்தோறும் அடுத்த பன்னிரெண்டு மாதங்களுக்கு பதிற்றிருமைப் பிறைநாளில் அவருக்கு உரிய பூசை வழிபாடுகளை செய்து உணவு படைத்து, மற்றவர்களுக்கும் பகிர்ந்து, காகம், பசு போன்ற உயிரினங்களுக்கும், சிவனடி யார்களுக்கும் உணவளித்து அவர்களின் சிவபுரப் பயணத்திற்கு வலுவூட்டுவதே அவர்களின் அவ்வுலக வாழ்விற்கும் எங்களின் இவ்வுலக வாழ்விற்கும் அருள் சேர்க்கும்.

**(08ஆம் பக்கம் பார்க்க)**

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி மாதம் தோறும் செய்யமுடியாததால் பன்னிரெண்டு மாதங்களுக்கும் சேர்த்து முதல் மாத பிறைநாளாகிய (திதியாகிய) தினத்தில் அல்லது அந்தியெட்டி நாளில் ஒன்றாக சேர்த்துக் கொடுப்பது தற்கால வழமையாக மாறிவிட்டது.

அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அதே திங்கள் (மாத) அதே பிறைநாளில் (திதியில்) ஆண்டுபிறைநாளாக (ஆண்டுத்திதியாக) தமிழர் மரபில் கடைபிடிக்கப்படுகிறது.

இப்படியான காலங்களில் அம்மாவை அல்லது அப்பாவை நினைத்து சிவனடியார்களுக்கு உணவளித்தல் பெரும்புண்ணியம்.

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி - *திருமூலர்*
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே - *மணிமேகலை*
பசித்தோர் முகம் பார் - *பட்டினத்தடிகள்*
ஐயமிட்டுண் - *ஔவையார்.*
ஒருபிடி சோறுகொண்டு இட்டு உண்டு இரு - *அலங்காரம்*
ஜீவகாருண்யம் , வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம், வாடினேன் - *திருவருட்பிரகாச வள்ளலார்*

பசித்தவனுக்கு அன்னந்தந்தால், உண்டவனுக்கு ஊன் குளிரும் , உள்ளம் குளிரும் , உணர்வு குளிரும் அத்துடன் உயிரும் குளிரும். உயிர் குளிர்ந்தால் உயிருக்குயிரான சிவம் குளிரும்.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே - *திருமந்திரம்*

அத்துடன் சிவனடியாருக்கு அமுது கொடுத்தலை திருஞானசம்பந்தர் சுவாமிகள் பின்வருமாறு விபரிக்கின்றார்.

இரண்டாம் திருமுறையில் திருஞானசம்பந்த சுவாமிகள் மயிலாப்பூரில் இறந்த பெண்ணின் சாம்பலில் இருந்து அந்தப்பெண்ணை உயிர் பெறச்செய்தார். அதற்காக தமிழில் பாடிய திருப்பதிகம் பூம்பாவைத் திருப்பதிகம் ஆகும். இப்படி பல அற்புதங்களை செய்யப் பாடப்பட்ட பதிகங்கள் தமிழிலே தான் பாடப்பட்டது என்பதை கவனத்தில் கொள்க.

அதிலே அடியாருக்கு அமுது செய்வதன் மகத்துவத்தினையே முதலாவது பாடலாக பாடியுள்ளார்.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்

# தென்புலத்தார் வழிபாடு

ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

இதனை பெரியபுராணத்தில் திருஞானசம்பந்த நாயனார் வரலாற்றில் தெய்வசேக்கிழார் ,

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என்று உரைப்பார்

சிவபெருமானின் அடியார்களுக்கு அமுது செய்வித்தலும், சிவபிரானின் திருவிழாக்களைக் கண்டு களித்தலும் மனிதப்பிறவியில் கிடைத்தற்கரிய பேறு என்று கூறுகிறார்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு - *திருக்குறள்*

என்பதற்கு அறவழியில் பொருளைத்தேடும் இவ்வுலகில் நாங்கள் அருளையும் தேடவேண்டும். அதேவேளை இறந்த எங்கள் முன்னோருக்கு , அப்பா அம்மா போன்றோருக்கு அவ்வுலகில் அருள் கிடைக்க இவுலகில் இருந்து ஆற்றும் கடனே பிறைநாள் (திதி , பிதிர் வழிபாடுகள்) வழிபாடுகள். இப்படியான வழிபாட்டினை நிச்சயமாக பிள்ளைகளாகிய, சகோதரர்களாகிய நாங்கள் செய்யவேண்டும். இது அவர்களுக்கு அவர்கள் சென்றபின் செய்யும் பணிவிடையாகும். அத்துடன் இதன்வழி எங்களுக்கும் அருளும் , பொருளும் , ஆற்றலும் வந்து கிடைக்கின்றன.

மறைமதி (அமாவாசை) தினத்தில் தென்புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மகாலய அமாவாசை)

வருடத்தில் சுறவத்திங்கள் மறைமதிப் பிறைநாள் (தை அமாவாசை) மற்றும் கடகத்திங்கள் மறைமதிப் பிறைநாள் (ஆடி அமாவாசை) முக்கியமான நாட்களாகும். இத்தினத்தில் விரதமிருந்து , நீர் நிலைகளில் அல்லது கிணற்றில் நீராடி இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வது சிறப்பானதாகும். அத்துடன் எள்ளுடன் தர்ப்பை புல் சேர்த்து , நீர் இறைத்து , பிண்டம் வைக்கக்கூடியவர்கள் பிண்டம் வைத்து வழிபாடு செய்யலாம். ( அண்டத்தில் இருப்பது பிண்டத்தில் இருக்கும் என்பார்கள்).

அத்துடன் ஆண்டுபிறைநாளாக (ஆண்டுத்திதியாக) மற்றும் திங்கள் (மாத) பிறைநாளில் (திதியில்) தென்புலத்தார் வழிபாடு செய்ய முடியாதவர்கள், பலவருடங்களாக செய்யாமல் விட்டவர்களுக்கு ஒரு சிறப்பான செய்தி. கவலையைவிட்டு கன்னித்திங்கள் (புரட்டாசி மாதம்) வருகின்ற மறைமதிப் பிறைநாள் (புரட்டாசி அமாவாசை) தினத்தன்று இந்த வழிபாட்டினை செய்யலாம். முன்னர் குறிப்பிட்டது போல கதிரவனின் தென்புலப்பயணம் தூய்மைப்படுத்துவதற்கானது (ஒடுக்க காலம்), ஆகவே இந்த மறைமதிப் பிறைநாள் மேலும் சிறப்பு பெறுகிறது. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் எம்முன்னோர்கள் பூமிக்கு வந்து எமது வழிபாட்டினை மற்றும் படையலை ஏற்கின்றனர் என்றும் கருதப்படுகிறது. அதற்கும் மேலாக அவர்களுக்கு அருளூட்டும் வகையில் நாங்கள் வழிபாடுகள் , சிவபூசை , சிவமங்கல நீராட்டு , சிவப்பெருவேள்வி , அடியாருக்கு அமுது , மற்றைய உயிரினங்களுக்கு உணவு , பசுவுக்கு உணவு , காக்கைக்கு உணவு படைத்தல் போன்றவற்றினை செய்து பலன்களை பெறலாம்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே - *பெரியபுராணம்*

சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடி தாமரையோனே - *திருமந்திரம்*

இப்படிபட்ட இறைவனை முழுமுதலாகக் கொண்ட சைவம் அதன் வழி வந்த தமிழ் இரண்டையும் இரு கண்களாகப் போற்றி, அதன்வழி நின்று பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்போம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

# தென்னாட்டு நிகழ்வுகளின் நிழல்கள்

ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்
திருமால் பூசைசெய்த திருக்கோவில் திருக்கச்சூர்










ஒன்பானிரா வழிபாடுகள்





கந்தன் கவின் அறுமை மற்றும் சூரன் பெருவாழ்வு







தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இரண்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு நளித் திங்கள் வளர்பிறை 15ம் நாள் (30-11-2020 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தனித்தமிழில் தர முயற்சிக்கிறோம்.
தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org